பக்கங்கள் 12 விலை சதம் 15

# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதர் வெளியடு

அலுவலகம்: 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், இலங்கை

மலர் 1 | 16-7-61 ஞாயிறு | இதழ் 5

மிஸிஸ் கடிறவேலின் சிகரஅலங்காரம் (காட்டூன்)
(ஒன்பதாம் பக்கம் பார்க்க)

பாடசாலைகளின்

## தேசிய மயத் திண்டாட்டம்!

"கல்வி நிலையங்களின் தேசியமயத்திட்டம் மிக அபாயகரமான நிலைக்கு நம்மைக் கொண்டுபோய் விட்டு விட்டது" என்று கல்வி இலாக்காவின் உதவி பிரதம காரியதரிசியும், பாடசாலைகள் தேசியமயத்திட்டப் பொறுப்பாளருமான டாக்டர் ஏ. டபிள்யூ. பி. குருகே கூறினுரெனத் தெரிகிறது.

பாடசாலைகள் தேசியமயமாக்கப் பட்டபின் அவைகளின் நிலையை நாடிபிடித்துப் பார்ப்பதற்காக யாழ்ப்பாணம் வந்த டாக்டர் குருகே இங்குள்ள மத்தியகல்லூரியில், பாடசாலை அதிபர்களை அழைத்து ஒரு கலந்துரையாடல் நடத்தினர்.

"பாடசாலைகளின் பொருளாதாரம் இவ்வளவு ஏமாற்றமளிக்கக்கூடியதாக இருக்குமெனநாம் முன்பு எதிர்பார்க்கவில்லை. இப்போதைய அபாயகரமான நிலைமையைச் சமாளிக்க அரசாங்கம் விரைவில் தகுந்த ஏற்பாடுசெய்யும்" என்று டாக்டர் குருகே மேலும் கூறினுராம்,

# 1962-ல் உலகம் அழிந்துவிடுமா?

## அனுபவமும் ஆராய்ச்சியும் தெரிவிக்கும் பயங்கரம்

அமெரிக்கா தவிர்ந்த மற்ற அத்தனை நாடுகளும் 1962 ம் ஆண்டின் ஆரம்பத்தில் பெரும் அவதிக்குள்ளாகப் போகின்றனவென்று சோதிடப் பேராசிரியர் மட்டுவில் சி. சுப்பிரமணிய ஐயர் எம். ஆர். ஏ. எஸ். கூறுகிறுர்.

உலகம் முற்ருக அழிந்துவிடாது. பூகம்பம், வெள்ளம், புயற் காற்று, யுத்தம். இவைகளால் மக்கள் பெரும் தொல்லைகளை அனுபவிப்பார்களாம். அசைக்க முடியாத ஆதாரங்களுடன் தனது கூற்றை விளக்குகிறுர் சோதிடப் பேராசான்.

1962-ம் வருடம் பெப்பிரவரி 2-ம் திகதி அஷ்டக்கிரக கூடம் ஏற்படுகிறது. அதாவது இராகு தவிர்ந்த மற்ற எட்டுக் கிரகங்களும் மகாராசியிற் கூடுகின்றன. இச்சமயத்தில் அவ்விராசியினுல் ஆளப்படும் தேசங்களுக்குப்பெருந்தீமைவிளையுமென்பது ஸ்ரீ சுப்பிரமணியஐயரின் கருத்து.

- 1861 செப்ரெம்பர் மாதத்தில்—அதாவது இன்றைக்கு 100 வருடங்களுக்கு முன் ஆறுஇராசிகள் சிங்கராசியில் கூடியபொழுது அமெரிக்காவிலும் இத்தாலியிலும் .உள்நாட்டுக் கலகம் ஆரம்பமாகியது.
- 1901-ம் வருடம் டிசம்பர் மாசத்தில் ஐந்து கிரகங்கள் தனு இராசியின் கூடிய பொழுது தென்னுபிரிக்காவில் போயர் யுத்தம்முடிவடைந்ததுடன் விக்டோரியாஇராணிக்கும் மரணம் சம்பவித்தது.
- 1921-ல் மூன்று கிரகங்கள் கன்னிராசிற் கூடிய பொழுது கிரீசுக்கும் துருக்கிக்குமிடையில் யுத்தம் மூண்டது.
- 1934-ம் வருடம் ஜனவுரியில் ஐந்து கிரகங்கள் மகா இராசியிற் கூடிய பொழுது பிகாரில் மிகப் பெரிய பூமி அதிர்ச்சி ஏற்பட்டது.

**1962-ம் வருடம் நிகழப்போகும் இந்த அஷ்டக்கிரகம் கடந்த 800 ஆண்டுகளில் நிகழப்பெருத் தொன்ருகும்.**

இக்கிரகச் சேர்க்கை 3-2-62-ல் ஆரம்பமாகி 5-2-62 ல் முடிவடைகிறது.

ஒரே இராசியில் பலகிரகங்கள் வரும்போது பூமியைச் சுற்றியுள்ள மின் காந்தப் புலத்திலும் ஆகாச வெளியிலும் குழப்பங்கள் தோன்றுவது இயற்கை. இவ்வாறு பூமி இந்த அதிர்வுகளை ஏற்று அதன் மீது வாழ்வோர் மேலும் அவ்வதிர்வுகளைச் செலுத்தி விடும். அதனுல் அவர்களது புறவாழ்விலும் அகவாழ்விலும் பல பாரதூரமான மாற்றங்கள் ஏற்படும். அத்தகைய அதிர்வுகளின் துர்ப்பலன்களாக பூமியில் வாழ்வோரின் மன உலகச்சூழலிலும் முற்றிலும் இயற்கைக்கு மாருன நினைவுகளையும் செயல்களையும் இவ்வதிர்வுகள் உண்டாக்கும். ஆனுல் இவை அதிககாலம் நீடிக்கமாட்டா,

இக்காலத்தை உலக அழிவு எனக் கருதுவது முறையற்றதெனச் சோதிடவல்லுனர் ஸ்ரீ சுப்பிரமணிய ஐயர் கூறுகிறுர்.

இலங்கைஅரசியல்வானில் இன்ெனுரு தமிழ் வாரப்பத்திரிகை உதயமாகப்போகிறது பத்திரிகைகளின் அகோரத் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் திணறும் ஒரு அரசியல்வாதியின் தடுப்புக்கேடயமாக இது விளங்கலாம்!

### "உலகம் அழிந்தால் நமக்கென்ன?"



சிங்களத் திரையுலகில் சுடர்விடும், இலங்கைத் தமிழ் நட்சத்திரம் 'ராணி சோமசுந்தரம்' இரகசியம் பேசுகிறுரா?.. — படம்: கிங்ஸிலி செல்லையா,

யாழ்ப்பாணத்தில்
'போட்' பலகைகள்
எழுதவும்
விளம்பர டிசைன்கள் வரையவும்
மிகச் சிறந்த ஓவியர்
"எஸ். என். ஆர்."
(ஆனந்தா அச்சகம் முன்பாக)
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் உடுப்புக்களை
நாகரிகமாகத் தைக்கவும்
றெடிமேட் உடுப்புவாங்கவும்
'யாழ்ப்பாணம்
றெடிமேட் ஸ்டோர்ஸ்'
8, பெரியகடை யாழ்ப்பாணம்

கவர்ச்சி கரமான
போட்டோக்கள்
எடுப்பதற்கு
வாசன்ஸ் ஸ்ருடியோ
மானிப்பாய் வீதி
யாழ்ப்பாணம்.

'புதினம்'
சுவையான செய்திக் கிழமை
இதழ்
ஓராண்டுக் கட்டணம்
ரூபா 8-00
தபால் மூலம் பெற
விரும்புவோர் ரூ. 8-00
அனுப்பிவைத்தால்
கிழமைதோறும் அனுப்பி
வைக்கப்படும்.
'புதினம்'
226, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தேவை
'புதினம்' விற்பனையாளர்
கள் இல்லாத இடங்களில்
நம்பிக்கையும் திறமையுமுள்ள
விற்பனையாளர் தேவை.
விபரங்களுக்கு:
'புதினம்'
226, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

# 'வட்டுக்கோட்டை அமிர்தலிங்கம் என்சொல்லைக் கேட்கவில்லை அதனால் கைவிட்டேன்'

### என்கிறார் வித்துவான் வேலன்

'வட்டுக்கோட்டைப்பிரதிநிதிதிரு. அமிர்தலிங்கம் அவர்களுக்கு அவருடைய தொகுதியில் நடந்த ஒரு பாராட்டுக் கூட்டத்திலே, "தமிழர்களுக்காக ஒரு தினசரிப் பத்திரிகை தொடங்குவதற்கு முயற்சிக்கும்படி சொன்னேன். 25 லட்சம் தமிழர்களிடம் ஆளுக்கு ஒரு ரூபா வீதம் கேட்டால் குறைந்தது பத்து லட்சம் ரூபாவாவது சேரும். அதைவைத்துக் கொண்டுபத்திரிகை நடத்தலாம்' என்று சொன்னேன். அவர் கேட்கவில்லை. என்னுடைய சொல்லைக் கேட்காதவர்கள் யாராயிருந்தாலும் அவர்களுடன் நான் சகவாசம் வைத்துக் கொள்ள மாட்டேன்!"

யாழ்ப்பாணத்தில் சென்ற வாரம் நடைபெற்ற இலக்கிய நண்பர்கள் கூட்டம் ஒன்றில் வித்துவான் வேலன் அவர்கள் மேற்கண்டவாறு கூறினார்!

## தொந்தரவு செய்யும் பெற்றோருக்கு 'வகுப்பு'

நம் நாட்டுக் கல்வித்திட்டம் அடிக்கடி மாற்றியமைக்கப் படுகின்றது. ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் அரசாங்கம் தனக்கு எது சரியென்று தோன்றுகிறதோ அதை உடனடியாக அமுல் நடத்த முயல்கிறது. இதனால் அவஸ்தைக்கு உள்ளாகுபவர்கள் மாணவர்களே.

வெளிநாடுகளில் மாணவர் கல்வியில் எவ்விதம் அக்கறை செலுத்துகிறார்கள் என்பதைக் கவனிப்போம். பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு அறியாமையால் பெற்றோரே தீங்கு விளைவிக்கிறார்கள் என்றுணர்ந்து பெற்றோருக்கே வகுப்புகள் வைத்து நடத்துகிறார்கள்.

பாடசாலைகளில் எல்லாத் துறையிலும் நாம் மாணவர்களுக்குப்பயிற்சியளிக்கிறோம். ஆனால் பெற்றோர் வீட்டிலும் பிள்ளைகளைத் தொந்தரவு செய்து அதிகமான வேலைகளைக்கொடுக்கிறார்கள். அதனால் மாணவர்கள் குழப்பமடைந்து விடுகிறார்கள் என்று லிச்பீல்ட் ஆசிரியர்களின் தலைவர் திரு டெனிஸ் யோர்க் கூறுகிறார்.

பெற்றோர்கள் அறியாமையால் செய்யும் தவறை நிவர்த்திக்க அவர் ஓர் திட்டம் வகுத்தார்.

ஒரு வாரத்துக்கு இரண்டு முறை அவர் பெற்றோருக்கு வகுப்புகள் நடாத்த ஆரம்பித்தார். இந்த வகுப்புகளுக்குப் பெற்றோர்கள் திரள் திரளாக வருகின்றனராம்.

## நாய்கள் கடிப்பது ஏன்?

நாய்கள் ஏன் கடிக்கின்றன? பயந்தா அல்லது தைரியத்திலா? இரண்டுக்காகவுமல்ல. 'மூன்றில் இரண்டு நாய்கள் சும்மா விளையாட்டுக்குத்தான் கடிக்கின்றன. அதற்கு எந்த வித நோக்கமுமில்லை' என்று ஆராய்ச்சியாளர் கூறுகிறார்.

வாஷிங்டனிலுள்ள அமெரிக்க பொது சுகாதாரசேவை அதிகாரியொருவர் நாய்களைப் பற்றி ஆராய்ச்சிசெய்து பல தகவல்களைவெளியிட்டுள்ளார்

ஆச்சரியமென்ன வென்றால் ஆண் நாய்களைக் காட்டிலும் பெட்டைநாய்கள்தான் அதிகமாகக் கடிக்கின்றன. அனேகமாகக்குளிர் காலங்களில் நாய்க் கடிஅதிகரிக்கிறதென நிபுணர்கள்கூறுகிறார்கள்.

## கல்வி இலாகாவின் வண்டவாளம்!

நிர்வாக அலங்கோலத்திற்கும், கால தாமதங்களுக்கும் கல்வி இலாகா பேர்பெற்று விளங்குகிறது. மாணவர்களும், ஆசிரியர்களும் எந்நாளும் அவதியும், அல்லலும் படும்படியாக கல்வி இலாகாவின் நிர்வாகம் இருக்கிறது.

புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்கள் பலர் மாதங்கள் பல ஆகியும் இன்னமும் சம்பளம் கிடைக்காது திண்டாடுகின்றனர்.

ஆசிரியர்கள் அடிக்கடி இடமாற்றம் செய்யப்படுவதனால் பாடசாலைகளில் அடிக்கடி நேரசூசி மாற்றும்படியாக நேரிடுகிறது. இதனால் வீண் காலதாமதங்களும் குழப்பங்களுமே மிஞ்சுகின்றன. அப்படி 'இடமாற்ற உத்தரவு' கல்வி இலாகாவினால் உரிய காலத்தில் கிளை அலுவலகங்களுக்கு அனுப்பப்படாத காரணத்தினால் இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் சம்பளம் கிடைக்காது திண்டாடவேண்டி இருக்கின்றது.

உபகாரச்சம்பளம் பெற்றுப் படித்த மாணவர்கள் சிலர் எஸ். எஸ் சி. பாஸ் செய்ததும் தாங்கள் படித்துவந்த பாடங்கள் அந்தப்பாடசாலையில்

பல பாடசாலைகளில் பிள்ளைகள் இருந்து படிப்பதற்கு வசதியான முறையில் வாங்கு மேசைகளே கிடையாது!

ஒவ்வொரு நாளும் புதுப் புதுச் சுற்றறிக்கைகள் விடுவதில் கல்வி இலாகாவின் கவனம் செல்கிறதே தவிர நிர்வாகத்தைச் சீர்படுத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதில்லை!

இந்தநிலைமையில் ஊரிலுள்ள பள்ளிக்கூடங்கள் அத்தனையையும் தன் தலையில் அள்ளிக்கட்டிக்கொண்ட கல்வி மந்திரியின் அதி புத்திசாலித்தனத்தை எண்ணி அழுவதா அன்றிச் சிரிப்பதா என்று தெரியவில்லை.

### வீண் குழப்பங்களும் கால தாமதங்களும்


எச். எஸ். சி. வகுப்பில் படிப்பிக்கப் படாத காரணத்தால் வேறுபாடசாலைக்குத் தங்களது உபகாரச் சம்பளத்தை மாற்றித்தரும்படி விண்ணப்பித்தனர். மாதங்கள் ஆறுக்கு மேலாகியும்அவர்களுக்கு வழி பிறந்ததாகத் தெரியவில்லை!

விஞ்ஞானம் முதலிய பாடங்களைப் பயிற்றுவதற்கு உரிய உபகரணங்கள் இல்லாமல் பல ஆசிரியர்கள் திண்டாடுகின்றனர். உபகரணங்களை அனுப்புமாறு எழுதப்பட்ட கடிதங்களுக்கு ஒரு பதிலையும் காணோம்!

### 'இங்கே ஏன் வந்தது?'

பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குள் டாக்டர் நுழைந்ததும் அவரது மேசையிலிருந்த மணிக்கூட்டைச் சுட்டிக் காட்டியபடியே "இது சரியாக ஓடுகின்றதா?" என்று கேட்டான். அது சரியாக ஓடுவதாக டாக்டர் சொன்னார். அதைக் கேட்டதும் அவன் கேட்டான்; அப்படியானால் ஏன் அது இங்கு வந்திருக்கிறது"

பேர்த் கிளீவ்லாண்ட் பம்ப்





வீட்டுப்பாவனைக்கும்
விவசாயத்
தேவைகளுக்கும்
சிறந்தது.

1", 1½", 2", 3"
அளவுகளில்
பெற்றோல்,
மண்ணெண்ணெய்,
டீசல்
மொடல்கள்
கையிருப்பில்
உள்ளன.

சென்ட் அந்தோனிஸ் ஹார்ட்வெயர் ஸ்ரோர்ஸ்,
516, ஸ்கின்னர்ஸ் ரோட் தெற்கு, கொழும்பு-10

எங்கள் அருமைப் பசுவுக்கு வைத்தியம் — 'சிவாஜி'




# மாநகரசபையில் 'மங்கி' 'டொங்கி!'

மந்திக் குரங்கு, எருமைக்கடா, கோவேறுகழுதை முதலான முக்கியம் மிக்க மிருகங்களின் பெயர்ப்பட்டியல் ஒன்று யாழ்ப்பாணம் 'மா' நகரசபைக்கு உடனே தேவைப்படுகிறது. அங்கத்தவர்கள் ஒருவரையொருவர் திட்டிக்கொள்வதற்கு இவை போன்ற சிறப்புப் பெயர்கள் கிடைக்காமல் அவதிப்பட்டார்கள். நினைவில் உள்ள பெயர்கள் யாவும் தீர்ந்துவிடவேகடைசியில் மடையா, மூடா, மட்டி, என்றெல்லாம் சாதாரண பதங்களைப்பாவித்துத்திருப்திப்பட்டுக்கொண்டனர் பாவம், பட்டப்பெயர்பற்றுக்குறையால் அவர்கள் திண்டாடியதைப் பார்க்கப்பரிதாபமாகஇருந்தது. அதுவும் பற்றுக்குறை 'பட்சற்' ஒன்றைக்கட்டிப் பிடித்து அழுத அன்றைய தினம் பார்த்தா இந்த அடைமொழித் தட்டுப்பாடு ஏற்படவேண்டும்?

இதற்கு பொறுப்புவேறுயாருமில்லை. சும்மா கிடந்த நகரசபையுடன் 'மா'வைச் சேர்த்து வைத்த மாபாவிகள் யாரோ அவர்களை லேசில்விடக்கூடாது. மக்கள் சபையை 'மா' நகர சபையாக்கிய கையோடு அந்த மாக்களின் ஜாபிதா ஒன்றைத்தயாரித்து மண்டபத்தில் தொங்கவிடத் தவறியஅவர்களுக்குமேற்படி சபைக் கூட்டங்கள் ஒவ்வொன்றையும் தவறவிடாது பார்த்து வருத்தப்படக்கடவது என்று சாபம் போடவல்லவா தோன்றுகிறது! சரி, சரி நடந்த தவறு எப்படியோ நடந்தது முடிந்துவிட்டது இனிச் சங்கதிக்கு வருவோம்.

திகதி: 7-7-61 வெள்ளிக்கிழமை.

இடம்: நகரசபையின் சபாமண்டபம்

சந்தர்ப்பம்: முதலாம் வட்டாரத்தின் முதற் பிரசையான திருவாளர் இராசசூரியர் இருகரங்களையும் நீட்டி 'என்னையும் பேசவிடுங்கள்: நான் சொல்வதைச் சற்று நிதானமாகக் கேளுங்கள்' என்று பத்தாவது தடவையாகப் பரிந்து பேசிய தருணம்.

மேயரின் வலக்கர்மும், இளம் உறுப்பினருமான திரு. தேவபாலசுந்தரம் எழுந்து நின்று இடை மறித்து எதையோ சொல்லவே. பின்பக்கத் தாக்குதலைச் சமாளிக்கும் நோக்கத்துடன் திரும்பினர் இராசசூரியர். மூண்டது சண்டை. பின்னர் கேட்கவா வேண்டும். மூடு வாயை, பேசாதே இரு, பொத்தடா வாயை, 'மடையா, மங்கி, டொங்கி, மாடு என்ற வரிசையில் இருவரும் நாமாவளி பாடினர். அதுமட்டுமா, சருவிக்கொண்டு கிட்டவும் நெருங்கப் பார்த்தார்கள். திரு இராசசூரியருக்கு உதவியளிக்க இத் தருணத்தில் எழுந்தார் ஹாஜி வி. எம். எம். அபுசாலி. அவரது வாயும் படபடவென்று பொரிந்து தள்ளியது. கடைசியில் கதிரைகள் இழுக்கப்பட்டன. எங்கே பார்ப்போம் எவரது கதிரை முதற் பறிக்கப்படுகிறது என்று எதிர்பார்ப்பதற்கிடையிலேயே, பக்கத்திலிருந்த திரு. யேக்கப் காரியத்தைக் கெடுத்துவிட்டார். தக்க சமயத்தில் அவர் ஜனப் அபுசாலியின் கையைப் பிடித்து ஆளை ஆசனத்தில் அமர்த்தவேண்டும்? இப்படியாகவே சண்டை முடிந்தது. சபையில் நிலவிய இரைச்சலும் ஓய்ந்தது.

* *

நகரசபை வேலைத்தலத்திலிருந்து சீமெந்து எவ்வாறு திருட்டுப் போகிறதென்பதை வர்ணித்தார் ஒரு உறுப்பினர். அது மட்டுமா, 'தொழிற்பகுதி எஞ்சினியரின் போக்கில் எனக்குத் திருப்தியே இல்லை. அவரை முன்னல் வைத்துக்கொண்டு தவறுகளைச் சுட்டிக் காட்டுவது பற்றி யாரும் தப்பாக நினைக்கக் கூடாது' என்ற பாணியில் டாக்டர் தர்மலிங்கம் ஆத்திரத்தோடு பிரசங்கம் செய்தார். இதனையடுத்துப்பேசிய திரு இராசரத்தினம் இருக்கிருரே, அவரது சொற்பொழிவில் ஆத்திரம் மட்டுமல்ல ஆவேச உணர்ச்சியும் கலந்திருந்தது. சுகாதாரப் பகுதிபற்றி அக்குவேறு ஆணிவேருக அலசி விட்டுத்தான் ஆசனத்தில் அமர்ந்தார் அவர்.

இத்தனை சிறப்பு அம்சங்களுடனும் அன்றைய வரவு செலவுத் திட்ட விவாதம் மங்களகரமாக முடிந்தது. சுமார் 7 லட்சம் பற்றுக் குறையுடன் நிறைவேறிய வரவுசெலவுத் திட்டத்தில் மங்கலத்துக்கு இடமெங்கேயிருக்கிறது என்று யாராவது கேட்டு வைக்கக் கூடும். கொய்யாத்தோட்டம்வட்டார உறுப்பினர் திரு. அழகையா தனக்கு ஆண் குழந்தையொன்று பிறந்ததாக மகிழ்ச்சி தெரிவித்து வழங்கிய தேநீர் விருந்துதான் அன்றைய கூட்டத்தின் கடைசி நிகழ்ச்சியாக இருந்தது. அது ஒரு மங்கலகாரியமா இல்லையா!

......சொல்லுக்குறுதி.

★ உங்கள் பற்கள்

★ நோய்களால் கெட்டுப் போகாமல் பாதுகாக்க

★ ஒரே பற்பொடி!

"ராதா" பயோறியா பற்பொடி

பற்சொத்தை, பல்வலி, ஈறுகரைதல், இரத்தம் அல்லது சீழ் கசிதல், வாய்ப்புண், இவற்றை நீக்கிப்

பற்களைப் பளிச்சென வைக்கும்!

— எங்கும் கிடைக்கும் —

சோல் ஏஜண்ட்:

எஸ். சுப்பிரமணியம் அன் கோ
53, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்
போன்: 541 தந்தி: மணிமா

# திரை மறைவில்

## 'சிலுவையில் அறையவேண்டும்!'

லங்கா சமசமாசக் கட்சியில் பெரும் பிளவு ஏற்பட்டு விட்டதாக முன்னுக்கு வரத் துடிக்கும் இரத்தினபுரிப் பிரதிநிதி டி. பி. ஆர் வீரசேகரா எங்கோ பேசியதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளிவந்ததல்லவா? பாராளுமன்றம் கலைக்கப்பட்ட அன்றைய தினம் அவர் சமசமாசக்கட்சிப் பிரதிநிதிகளிடம் நன்ருக மாட்டிக்கொண்டார். அவரைக் கண்டதும் ''இதோ வருகிருர் பெரிய மனுஷன்'' என்று கேலி செய்ய ஆரம்பித்தார் சமசமாசக் கட்சிப் பிரதிநிதி நீல் டி. அல்விஸ். "நான் அப்படிச் சொல்லவில்லை; பத்திரிகைகள் தவருகப் பிரசுரித்துவிட்டன'' என்று சொல்லித் தப்பமுயன்ருர், தான் பேசுவதென்ன என்பதை அறியாமலே பேசும் வீரசேகரா. "இந்தப் பத்திரிகையாளரைச் சிலுவையில் அறையவேண்டும்'' என்று பத்திரிகையாளர் பக்கம் திரும்பியது நீல் டி அல்விசின் கோபம்!

## முற்றியுள்ள தகராறு:

அடுத்தடுத்துப் பல மசோத்தாக்களைச் சனப் பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பித்துக்கொண்டிருக்கும் தும்பனே ரி பி. இலங்கரத்தினுவிற்கும் தனது தோளிலேயே முழு அரசாங்கமும் தங்கியிருப்பதாக எண்ணிக்கொண்டிருக்கும் நிதியமைச்சர் பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்காவிற்குமிடையில் பல மாதங்களுக்குமுன்பு ஆரம்பமான தகராறு இப்பொழுது வலுவாக முற்றிக்கொண்டதாம். இத்தகராறு சம்பந்தமாக இராஜினுமாக் கதைகளும் அடிபட்டனவாம். இலங்கரத்தினுவிற்கு 'இராஜினுமா' என்ற வார்த்தையை எப்படிச் சொல்வது என்பதே தெரியாத விஷயம் என்பது யாவர்க்கும் தெரிந்ததல்லவா?

## தொண்டமானின் பாராட்டு:

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபன மகாநாட்டிற்குப் போய்விட்டுத் தற்காலிக தொழிலமைச்சர் திரு. எம். பி. டி. சர் சிறிவர்த்தன அண்மையில் இலங்கை திரும்பியிருக்கிருர். அவரைப் பாராளுமன்றத்தில் சந்தித்தபோது நியமனப் பிரதிநிதி திரு. எஸ். தொண்டமான் அவரிடம் சென்று ''சர்வதேச தொழில் ஸ்தாபன மகாநாட்டில் தாங்கள் திறமாகச் சொற்பொழிவாற்றியதாகக் கேள்விப்பட்டேன். மகிழ்ச்சி'' என்று தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

## வித்தியாதரிசிகட்கு இடமாற்றம்.

உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்வதுதான் கல்வி இலாகா செய்யும் முக்கிய வேலையாகத் தெரிகிறது. ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதை போதாதென்று இப்பொழுது அவர்கள் வித்தியாதரிசிகள் எல்லாரையும் இடமாற்றம் செய்கிருர்களாம். அடுத்தமாதம் முதலாம் திகதி இடமாற்ற உத்தரவு அமுலுக்கு வருகிறதாம்! சிங்களமாகாணங்களிலுள்ள பெரும்பாலான தமிழ்ப் பாடசாலைகட்கு முஸ்லிம்களையே வித்தியாதரிசிகளாக நியமிக்கின்ருர்களாம்.

## முஸ்லிம் பாடசாலைகளாகும்:

தோட்டப் பகுதிகளிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளில் பெரும்பாலானவற்றை முஸ்லிம் பாடசாலைகளாக்கும் முயற்சியொன்றில் கல்வி இலாகா இப்பொழுது ஈடுபட்டிருப்பதாகத் தெரியவருகிறது! எப்படி அதைச் செய்யப்போகிருர்கள் தெரியுமா? பாடசாலைகளைத் தமிழ்ப் பாடசாலையென்றும் முஸ்லிம் பாடசாலையென்றும் தரம் பிரிக்கும்போது இலங்கையர்கள் மட்டுமே கணக்கிலெடுக்கப்படவேண்டுமென்று ஒரு விதியைக் கொண்டுவரப் போகிருர்களாம். அப்படி ஒரு விதியைச் செய்தால் பெரும்பான்மையான தோட்டப் பாடசாலைகளில் இலங்கைப் பிரசைகளாகவுள்ள தமிழ்ப் பிள்ளைகளிலும் பார்க்க முஸ்லிம் பிள்ளைகளின் தொகை அதிகமாக இருக்குமாம். ஒரு பாடசாலையில் 150 பிள்ளைகள் படிக்கிருர்கள் என்று வைத்துக்கொள்வோம். அவர்களில் 130 பிள்ளைகள் நாடற்றவர்களின் பிள்ளைகளாகவிருக்கும். ஐந்தோ ஆருே தமிழ்ப் பிள்ளைகள்தான் இலங்கைப் பிரசைகளாகவிருக்கும். பத்துப் பதினைந்து முஸ்லிம் பிள்ளைகள் இருப்பார்கள். புதிய முறைக் கணக்கெடுப்பின்படி நாடற்றவர்களின் பிள்ளைகளும் கணக்கிலெடுக்கப்படமாட்டார்கள். மிச்சப் பிள்ளைகளைக் கணக்கிலெடுக்கும்போது முஸ்லிம் பிள்ளைகளின் தொகைதான் அதிகமாகவிருக்கும். இந்த அடிப்படையில் அப் பாடசாலைகள் எல்லாம் முஸ்லிம் பாடசாலைகளாக்கப்படும்.

## மட்டுநகருக்கு மாற்றப்படுவர்

ஐந்தாண்டுக்குமேல் மற்றமாகாணங்களில் வேலைசெய்த மட்டக்களப்பு ஆசிரியர்களை அடுத்த ஆண்டு ஆரம்பத்திலிருந்து மட்டக்களப்பிற்கு இடமாற்றம் செய்வதெனக் கல்வி இலாகா முடிவுசெய்துள்ளதாம். மட்டக்களப்பில் 63 காலி இடங்கள் இருப்பதாகவும் 26 மட்டக்களப்பு ஆசிரியர்களே வெளி மாகாணங்களில் வேலை செய்வதாகவும் கூறப்படுகிறது. 26 பேரையும் மட்டக்களப்பிற்கு இடமாற்றம் செய்து அந்தக் காலி இடங்களை நிரப்பலாமே! கல்வி இலாகாவிற்கு இப்படியான நல்ல புத்தி எங்கே வரப்போகிறது?

## குரு வித்தியாலயம்

ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் கல்லூரிகளை இதுகாறும் ஆசிரியபயிற்சிக் கல்லூரி என்று அழைத்து வந்தோமல்லவா? அக்கல்லூரிகட்குக் 'குருவித்தியாலயம்' என்ற புதுப்பெயரொன்றைக் கல்விப் பகுதியினர் சூட்டியிருக்கின்றனராம்! 'நாங்கள் குரு வித்தியாலயத்தில் பயில்கின்ருேம்!' என்று சொல்வார்கள் பயிற்சிபெறும் ஆசிரியர்களெல்லாம் இனிமேல். எப்படியிருக்கிறது தமிழ் வளர்ச்சி!

## கோமாளிகளும் வேண்டும்

உயர்திரு கே. சி. நடராசா அவர்களுக்கு!

வணக்கம் ஐயா! தாங்கள் நைசீரியா செல்வதாக அறிந்து மனவருத்தப்பட்டவர்களில் நானும் ஒருவன். கோமாளிகள் இல்லாவிட்டால் அரசியல் சுவைக்காது என்று கருதுபவன் நான்.

அன்புள்ள,
சாவகச்சேரியில் கல்லடித்தான்.

## வெளிவராத செய்தி:

டாக்டர். என். டி. விஜயசேகராவிற்குத் ''தமிழ் வளர்க்கும் பெம்மான்'' என்ற பட்டத்தைச் சூட்ட தமிழ் கிளர்ச்சிக் கழகம் முடிவுசெய்துள்ளது.

## வெளிவராத புத்தகம்

'சாஷ்டாங்க நமஸ்காரம்' என்ற புத்தகம் ஒன்றை சைவப் பழம் திரு. எம். ஸ்ரீகாந்தா எழுதி வருவதாக அறியக்கிடக்கிறது.

## பிழை திருத்தம்

''கல்வி மந்திரி காட்டும் அக்கரை'' என்பதைத் திருத்திக் ''கல்வி மந்திரி கட்டும் அக்கழை'' என வாசிக்கவும். தவறுக்காக வருந்துகிருேம். —ஆசிரியர்

— அம்பலத்துறைவோன்.

நீதிபதிக்கு முன்னுல்:-

# கண்ணே என்னேடுவா

''நாங்கள் அவரை எங்களுடன் வந்து விடும்படி அழைக்கின்ருேம் ஐயா!'' என்று சொன்னுர் மாரியப்பனின் வழக்கறிஞர்.

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்று மகாலட்சுமியின் வழக்கறிஞரைக் கேட்டார் நீதவான்.

''நாங்கள் போக மறுக்கின்ருேம் ஐயா!'' என்ருர் மகாலட்சுமியின் வழக்கறிஞர். குயில, மயில், அன்னம் இப்படி எத்தனையோ பறவைகளை உவமானம் சொல்கிருேமல்லவா? அந்தப் பறவைகள் எல்லாவற்றினதும் அழகான அம்சங்கள் ஒன்று திரண்டு திரு அவதாரம் எடுத்தால் எப்படியிருக்குமோ அப்படிக் காட்சியளித்தாள். மகாலட்சுமி.

''அவருடன் போக ஏன் மறுக்கிறீர்கள்''? நீதவானின் கேள்வியிது.

''திருமணம் முடிந்த ஒரு வாரத்திலேயே எனது சீதனப் பணத்தையும் பொருளையும் தன்னிடம் ஒப்படைக்குமாறு நிர்ப்பந்திக்கத் தொடங்கிவிட்டார் ஐயா'' என்று குயில் மொழியில் கூறினுள் மகாலட்சுமி. ''அதுமட்டுமல்ல அவர் என்னைத் திருமணம் செய்யவில்லை; பணத்தைத்தான் திருமணம் செய்தார். என்னேடு பேசும் நேரத்திலெல்லாம் எனது சீதனம் பற்றித்தான் பேசுவார். எனக்கு மதிப்பளிக்காதவரோடு நான் வாழ விரும்பவில்லை.''

நீதவானின் பார்வை கணவனின் பக்கம்திரும்பியது. ''கண்ணே! நீ என்னுடன் வா? உன் நினைவாகவே இருக்கின்றேன் நான்'' என்ருர் மாரியப்பன் கைகளை நீட்டியபடியே! கோட்டில் ஒரே சிரிப்பொலி.

''நீங்கள் புதிதாக மணமானவர்கள். இனிமேல் அவர் உன்னைக் கவனிப்பார். அவருடன் போகிருயா?'' என்ருர் நீதவான். தலையை அசைத்துத் தனது இணக்கத்தைத்தெரிவித்தாள் அம்மடநல்லாள்.

''இங்கே பார்! இவ்வளவு அழகான மனைவி கிடைத்திருக்கிருளே என்று பெருமைப் படுவதை விடுத்து பணப்பேய் பிடித்து அலைகிருயே! மனைவியைச் சந்தோஷப்படுத்தி நீயும் சந்தோஷமாகவாழ். இன்னும் ஒரு மாதத்தில் வழக்கைக் கூப்பிடுவேன். அப்போது நீங்கள் வந்து சந்தோஷமாக இருப்பதாகக் கூறவேண்டும்''

கணவனும் மனைவியும் ஒன்ருக வெளியேறினர்.

# 'ரைப்பிஸ்ட்'பெண்ணுடன்பேட்டி

## அவள் கூறிய ரசமான செய்திகள்

உத்தியோகம் என்று அடிபடுகிருர்கள் பெண்கள். இந்த உத்தியோக யந்திரங்களின் உள்ளே புகுந்து வெளியே வந்தால் அனுதாபந்தான் ஏற்படும். இதோ ஒரு டைபிஸ்ட் கூறுகிருர் கேளுங்கள்:

"களு"க்கென்று சிரித்தாள் லில்லி, நான் எதிரே போய் உட்கார்ந்ததும். "ஏன் அப்படிச்சிரிக்கிறீர்கள் மிஸ் லில்லி?" என்று கேட்டேன் வினயமாக.

லில்லி ஒரு ரைபிஸ்ட். அவளைப் பேட்டி காண்பதென்றுஏற்கெனவே செய்து கொண்ட ஏற்பாட்டின் படிதான் அன்று அவளிடம் போயிருந்தேன். அவள் சிரிப்பின் அர்த்தம் புரியாமல் என்னையே சுற்றிச் சுற்றிப் பார்த்தேன்.

"நான் உங்களைப் பார்த்துச் சிரிக்கவில்லை. உங்களைக் கண்டதும் பழைய நினைவொன்று என்சிந்தையில் இளையோடியது; அதனுல்தான் சிரித்தேன். போகட்டும். இப்பொழுது கேட்கவேண்டியதைக் கேளுங்கள்" என்றுள்.


"என் பேட்டியின்ஆரம்பமாக நீங்கள் சிரித்ததின் காரணத்தையே கூறுங்களேன்; குறித்துக்கொள்ளுகிறேன்."

"அதொன்றும் முக்கியமானதல்ல. நீங்கள் விரும்பினுல் கூறுகிறேன்" என்று சொல்லிவிட்டுத் தொடர்ந்தாள்.

"நான் ரைப்பிஸ்டாக வேலையேற்றது என் வயிற்றுப் பிழைப்புக்காகத்தான். ஏதோ பொழுது போக்குக்காக என்று பொய்கூற எனக்கு இஷ்டமில்லை. அது சரி........உங்கள் சப்பாத்தை நீங்கள் இன்றுதானே பொலிஷ் செய்தீர்கள்?"

"உம்......ஆமாம் ஏன்?"

இல்லை ...... சும்மாதான் கேட்டேன் .. ... உங்கள் கால் சட்டை, சேட் எல்லாம் இன்றுதான் பெட்டிக்குள்ளால் இருந்து எடுத்துப் போட்டிருக்கிறீர்கள்...... இல்லையா?"



"நீங்கள் அவசியமில்லாதகேள்வியெல்லாம் கேட்கிறீர்களே... நானல்லவா உங்களிடம் கேள்வி கேட்க வந்திருக்கிறேன்."

"எல்லாம் காரணத்தோடுதான் கேட்டேன். எங்கள் கந்தோருக்குநான் முதல்நாள் வேலைக்குச் சென்றபோது அங்கிருந்த கிளாக்மார்எல்லாம் பேய் பிசாசுகள் போல் இருந்தார்கள். நான் ஒரு பெண் ஜென்மம் உள்ளே கால் வைத்தேனே இல்லையோ எல்லாரும் மடிப்புக் கலையாத கால்சட்டை சேட் அணிய ஆரம்பித்துவிட்டார்கள். அந்த நினைவு வந்ததும்தான் முதலில் சிரித்தேன். உங்களைத்தான் பாருங்களேன், பெண் அழகோ இல்லையோ, பெண்ணைப் பேட்டி காணப்போகிறோம் என்றதும் எப்படி வந்திருக்கிறீர்கள், உங்கள் நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்கள். உண்மையா, இல்லையா?"

நான் அசடுவழியச்சிரித்தபடியே "உங்கள் உத்தியோக அனுபவத்தைச் சொல்லுங்கள்" என்று தூண்டினேன். அவள் "என்னுடைய அபிப்பிராயம் தவறுனுல் மன்னித்துக்கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டுத் தொடர்ந்தாள்.

"ஆமாம், நாங்கள் எத்தனை பேருக்கு நல்லவர்களாக நடிக்க வேண்டும். சுருக்கெழுத்து ரைப்பிஸ்ட்டானுல் நிறையச் சம்பளம் கிடைக்கும். ஆனுல் நான் சாதாரண ரைபிஸ்ட்;சம்பளம் மிகக்குறைவு. எடுக்கும் சம்பளத்தில் என் வறிய பெற்ருருக்கு அரைவாசியைத்தான் கொடுக்க முடிகிறது. அரைவாசியை என்ஆடை அணிகளுக்காகச்செலவிடுகிறேன். நன்கு அலங்கரித்துக்கொண்டு போகவில்லையானுல் மனேஜர் சீறிவிழுவார். சிரித்துப் பேசவில்லையென்ருல் எதையாவது கோள் சொல்லி கிளாக்குகள் என்னை மாட்டி வைத்துவிடுவார்கள். அத்தனை ஆண் கிளாக்மாருக்கும் நான் பல்லைக் காட்டவேண்டும். அவர்கள் பச்சை பச்சையாகச் செய்யும் கிண்டல்களுக் கெல்லாம் நான் இன்முகம் காட்டி முறுவலிக்க வேண்டும். ஒருவர்மீதென்ருல் புகார் செய்யலாம் எல்லோருமே அப்படியென்ருல் நான் என்ன செய்வது?

எல்லோருக்கும் பல்லைக் காட்டுவதில் ஒரு நன்மையுமிருக்கிறது. பஸ் ஸ்ராண்டில் யாராவது ஒருவர் வந்து பக்கத்தில் நின்று கொள்ளுவார். கந்தோரில் பாதிச் சிகரெட்டுக்குப் பல்லைக் காட்டுபவர் பஸ்ஸில் என்னை ரிக்கெட் எடுக்கவே விடமாட்டார். மாசத்தில் 25 நாள் பஸ்ஸில் எனக்கு 'ஓசி'ப்பிரயாணம் கிடைக்கும்.

எல்லோருமே எனக்கு நண்பர்கள். நண்பர்கள் என்ற அளவில் நிற்காமல் சிலர்கொஞ்சம் எல்லைமீறியும் போய்விடுவதுமுண்டு. படம், பார்க், பீச், என்று அழைப்பார்கள். அவர்களைத் தட்டிக் கழிக்க நான் எடுக்கும்பிரயத்தனத்தை ஒரு அரசியல் வாதிகூட எடுக்க மாட்டார். சில விடாக் கண்டர்களுடன் போய்த் தொலைய வேண்டிக்கூட ஏற்படத்தான் செய்யும். அவர்கள் கண்ணே! பொன்னே! என்று கதறி அழுவதைக்காதால் வாங்கிக் காற்றில் விடுவேன். என்ன செய்வது என் உத்தியோகம் அப்படி!"

— ரகு

# இளம்பெண் மறைத்து வைத்திருந்தது என்ன?

## பச்சைக்குழந்தையா, பயங்கரக் குண்டா?

## உயிரைக் கொடுத்து ஊரைக் காத்த உத்தமி

இரண்டாவது யுத்தத்தின்போது பிரிட்டிஷ் பிரயாணிகள் கப்பலொன்று கடலிலே வந்துகொண்டிருந்தது. திடீரென்று அதை நாஜியுத்தக் கப்பல் வளைந்து கொண்டது. எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட இந்த அபாயத்தைக் கண்ட பிரயாணிகள் பயந்து கதிகலங்கிப் போய் வெள்ளைச் சேலைகளை வீசினுர்கள், வெள்ளைச்சேலைகாட்டினுல்எதிரி தாக்கக்கூடாதென்பது சம்பிரதாயம். ஜேர்மன் இராணுவத்தின் சுபாவந்தான் யாவருமறிந்ததாயிற்றே!

கப்பலில் உள்ளவர்கள் பிரயாணிகள் என்றது நிச்சயமானதும் ஜேர்மன் படைத் தலைகன் "மைக்"கில் கூறினுர்:

"உங்கள் கப்பலை நாங்கள் தகர்க்கப்போகிறோம். சிறுவர்களும், பெண்களும் மட்டும் எங்கள் கப்பலுக்கு வந்துவிடுங்கள்!"

அவ்னது உத்தரவின் அர்த்தம் வெளிப்படையானது. பெண்கள் இராணுவத்தினருக்கு; மற்றவர்கள் அனைவரும் குண்டுக்குப் பலியாக வேண்டியதுதான்.

கப்பலில் பிணைக்கப்பட்டிருந்த சிறிய படகொன்றில் பெண்கள் கோஷ்டியொன்று முதலில் சென்றது. படகிலிருந்த பெண்களில் ஒருத்தி கையில் ஒரு சிசுவைச் சேலையால் போர்த்து வைத்திருந்தாள். அவளே முதலில் படகிலிருந்து கப்பலுக்குள் ஏறினுள். ஏறிய அதே வினுடியில் கிடுகிடுக்கும் பேரொலியொன்று கேட்டது.

அவ்வளவுதான்.குபுகுபுவென்று ஜேர்மன் கப்பலுக்குள் நீர் புகுந்தது. ஜேர்மன் ராணுவத்தினர் அங்குமிங்கும் ஓடினர் சில மணிநேரத்தில் ஜேர்மன் கப்பல் நீரில் ஆழ்ந்துவிட்டது.

ஆம். அவள் எடுத்துச் சென்றது குழந்தையல்ல —குண்டு. தன் இனத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானேரைக் காப்பாற்றத் தன் உயிரையே தியாகம் செய்துவிட்டாள். அந்த வீர நங்கை! நாட்டுப்பற்று அவள் இரத்தத்தோடு கலந்திருந்தது. அவள்செய்த தியாகத்துக்கு நாட்டுப்பற்றுமட்டுமல்ல.தாய்மை உணர்ச்சியும் ஒரு காரணமாகும். சரித்திரத்தைப் புரட்டினுல் இதைப் போன்ற எத்தனையோ தியாகங்களைப்பெண்களே அதிகமாகப் புரிந்திருப்பதைக் காணமுடியும்.

# ஜி. சி. ஈ. தேர்வில் பார்த்தெழுதிய மாணவி

## மூன்று வருடங்கள் பரீட்சை எடுக்கத் தடை!

“நிருபா..... நிருபா..... கொஞ்சம் சிரி நிருபா......”

நிருபா சிரிக்க முயன்ருள். ஆனால் அவளால் சிரிக்க முடியவில்லை. அழுகைதான் வந்தது. நிமிர்ந்து ரதிகாவைப் பார்த்தாள். கண்ணீர் அவள் கன்னங்களில் கோடு கிழித்தது.

“பைத்தியமே, அழுகிருயா? இப்போ என்ன நடந்துவிட்டது” என்று ஆதரவோடு கூறியபடியே நிருபாவின்பக்கத்திலமர்ந்தாள் ரதிகா.

நிருபாவும் ரதிகாவும் பள்ளித் தோழிகள். இருவரும் ஜி. ஸி. ஈ. வகுப்பில் படித்துக் கொண்டிருந்தனர். நிருபா ஏழைக் குடும்பத்தில் பிறந்தவள். ரதிகா அப்படியல்ல. ரதிகாவின் அப்பா பெரிய செல்வந்தர். இரண்டுமைல் தூரம் நடந்து நிருபா தினமும் பாடசாலைக்கு வருவாள். ஆனால் சுமார் அரைமைல் தூரத்திலுள்ள பாடசாலைக்கு ரதிகா தினமும் ‘பென்ஸ்’ மோட்டாரில் வருவாள். அந்தஸ்தைப் பொறுத்தவரை இரண்டு துருவங்களில் வசித்த இரு இளம் உள்ளங்கள். எப்படி இணைந்தனவோ?

இரண்டு ரூபா பெறுமதியுள்ள புத்தகத்தை வாங்க முடியாது மாதக் கணக்கில் அவஸ்தைப் படுவாள் நிருபா. பல மாணவிகள் மத்தியில் எழுந்து நின்று தலைகுனிந்தபடியே ஆசிரியைக்குப் பதில் சொல்லும்போது விஷயத்தைப் புரிந்துகொண்டு தன்னிடம் கூறவில்லையே என்று கடிந்து கொள்ளுவாள் ரதிகா. ஆம் உண்மைதான்; தினம் பாடசாலையிலுள்ள ‘கன்டீனி’ல் மூன்று ரூபாய்க்குமேல் செலவுசெய்யும் ரதிகாவுக்கு ஒரு அற்ப புத்தகத்தை வாங்கி நிருபாவுக்குக் கொடுக்கமுடியாதா என்ன?

எவ்வளவுதான் உயிர்த்தோழியானாலும் தனது கஷ்டத்தை ரதிகாவிடம் கூறமாட்டாள் நிருபா. ஆனால் நிருபா கேட்காமலேசமயமறிந்து உதவி செய்வாள் ரதிகா. இஷ்டமில்லாவிட்டாலும் சந்தர்ப்ப சூழ்நிலை ரதிகாவின் உதவியை ஏற்கும்படி தூண்டிவிடும்: அன்றும் அப்படித்தான் நடந்தது. பரீட்சைக்கு எல்லோரும் பணம் கட்டிவிட்டார்கள். அன்றுதான் பணம்கட்ட வேண்டிய கடைசித்திகதி. நிருபாவின் அம்மா எவ்வளவோ முயன்றும் பணம் புரட்டமுடியாமற்போய்விட்டது. கண்ணைக் கசக்கியபடியே வகுப்புக்குள் நுழைந்தாள் நிருபா. ஆனால் அவள் இன்னும் பணம் செலுத்தாததைப்பற்றி ஆசிரியை ஒருவார்த்தை கூடக் கேட்கவில்லை. பாடசாலை விட்டதும் தன்நிலையை, ஆசிரியையைத்தனியாகச் சந்தித்துக் கூறவேண்டுமென்று முடிவு செய்தாள் நிருபா. ஆனால் பாடசாலை விடுமுன்னமே பணம்கட்டிய பற்றுச்சீட்டு ஒன்றை யாருக்கும் தெரியாமல் நிருபாவின் கைக்குள் திணித்தாள் ரதிகா. விஷயத்தைப் புரிந்து கொண்ட நிருபாவின் உடல் அவமானத்தால் குன்றியது. ஆனால் அவளால்வாய் திறந்து ஒன்றுமே கூறமுடியவில்லை.

இதில் ஆச்சரியமென்னவென்ருல் ரதிகா படிப்பில் மகா கெட்டிக்காரி. பணக்காரப்பிள்ளைகள் இயற்கையாகப்பாடங்களை அலட்சியம் செய்வது போல் இவள் செய்வதில்லை. இயற்கையிலேயே ரதிகா விவேகி.

நிருபாவை ‘மக்கு’ என்று கூறமுடியாது. ஆனால் இவளை ரதிகாவோடுஒப்பிடமுடியாது சுமாராக எல்லாப்பாடங்களிலும் ஓரளவு திறமையுள்ள நிருபாவுக்குக் கணிதம் கட்டிப் போட்டாலும் வராது. கணக்குப்பாடம் என்றதுமே உடல் நடுக்க மெடுத்துவிடும்.

அன்றுவிண்ணப்ப பரீட்சை சொல்லிவைத்தாற்போல் முதலில் கணக்குப் பாடந்தான் சோதித்தார்கள். வெள்ளைக் கடதாசிகளை மேசைமீது பரப்பிவைத்துக்கொண்டு விழித்தாள் நிருபா, ஒரு கணக்குமே புரியவில்லை. திடீரென்று ஒரு கடதாசிப் பந்து அவள் காலடியில் வந்து வீழ்ந்தது. ஆவலோடு அதைஎடுத்துப் பிரித்துப் பார்த்தாள் நிருபா. அத்தனை கணக்குகளும் அதில் செய்யப்பட்டிருந்தன, ஆம் ரதிகாவின் கையெழுத்துத்தான். ஒரே மூச்சில் எல்லாவற்றையும் கொப்பியடித்தாள் நிருபா. பரீட்சை முடிந்து விட்டது. ஆனால்...

மறுநாள் ரதிகாவையும் நிருபாவையும் ஆசிரியை அழைத்தபோது இருவருமே கதிகலங்கி விட்டனர். தலைகுனிந்தவாறு இருவரும் ஆசிரியை முன்னால் பலி ஆடுகள் போல் நின்றனர்.

“நீங்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்தெழுதியிருக்கிறீர்கள். மறுக்கமுயற்சிக்கவேண்டாம். உங்கள் இருவருக்கும் ஒரு கணக்கில் ஒரே விதமான பிழை ஏற்பட்டிருக்கிறது. நீங்கள் இருவரும் மூன்று வருடத்துக்குப் பரீட்சைக்குத் தோன்ற முடியாதபடி தடை விதிக்கப் போகிறேன்.

நிருபாவின் உள்ளம் துடிதுடித்தது. ‘என்னால் ரதிகாவுக்குந் தண்டனையா?’ அவளால் நம்பவே முடியவில்லை. தடுமாறியபடியே “ரீச்சர்...” என்ருள்.

ரதிகா முந்திக்கொண்டாள். “ஆமாம் ரீச்சர். நிருபா நிரப்ராதி. “அவளை நான் பார்த்தெழுதியது அவளுக்குத் தெரியாது. நான் செய்த குற்றத்துக்கு தண்டனையை நானே அனுபவிக்கிறேன். ஒருபாவமும் அறியாத அவளுக்குத் தண்டனை விதிக்காதீர்கள்.

நிருபாவினுல் துணிந்து உண்மையைக் கூற முடியவில்லை. அவளுடைய வாழ்க்கைப் பிரச்சனையே அந்தப் பரீட்சையில்தான் தங்கியிருக்கிறது. அல்லாமலும் பார்த்தெழுதுவது மட்டுமா குற்றம். கொப்பியடிக்க உதவியவளும் குற்றவாளிதா தண்டனை இருவருக்கும் கப்பட்டிருந்தாலாவது ந நிம்மதியடைந்திருப்பாள் காமட்டும் தண்டனை அ விப்பதென்ருல்......

‘சீ, என்ன சுயநலம்! ளம் பொருமியது. க நீரைப் பெருக்கின. ஆ சிரித்தபடியே சிறிதும் யின்றி முன்னால் வந்து ருள் ரதிகா.

“என்ன நிருபா, சிரி ட்டாயா? நீ அழுதால் நா அழுவேன்.”

“நான்தானே குற்ற நீ ஏன் ரீச்சரிடம் கூறினுய் ரதிகா...”

“பைத்தியமே. பள்ளி ப்பு எனக்கொரு விளையா அப்பா ஒன்றும் என் கோபித்துக் கொள்ள டார். அல்லாமலும் ந அப்பா பாடசாலைக்கே யெடுத்துவிடுவார். அ வின் தலைக் கறுப்பைக்க தும் பிரின்சிப்பல் “ததி தோம்” போடுவார். பாரேன் நிச்சயம் நான் ளேடு பரீட்சைக்குத் தே றத்தான்போகிறேன். எ உனக்கேற்பட்டிருந்தால் அம்மா எவ்வளவு கவலை வாள் என்பது எனக் தெரியாதா...” அன்போடு காவின்கைகள் நிருபா கன்னங்களில் வடிந்தக ரைத் துடைத்தன. துடைக்கும் அந்தக் கரங் உணர்ச்சியோடு பற்றிப் தாள் நிருபா. அவளால் திறந்து ஒன்றுமே பேச யவில்லை.



**நிருபாவும் ரதிகாவும் உயிர்த் தோழிகள். ஏழையான நிருபாவுக்காக செல்வச் சீமாட்டி ரதிகா அப்பிளிக்கேசன் பணத்தைக்கட்டினுள். அதற்குப் பதிலாக நிருபா உதவி செய்ய முனைந்தபோது தான் ஆபத்து வந்தது!......**

## சிநேகிதிக்காக ஒருபெண்செய்ததியாகம்

---

# ‘ரெக்கன் ரேல்’ சங்கீதம் ‘கடமுடா’ வகையானதா?

## அதனாலும் பயிர்கள் வளர்கின்றனவே!

படமெடுத்தாடும் பயங்கர நாகம் பணிந்து கொடுக்கும் இனிய சங்கீதத்துக்கு, அசுனப் பறவைகள் இனியகானத்தில் லயித்துப்போயிருக்கும் போது அபசுரமாகப் பறையறைந்ததும் அவை தாங்கமாட்டாது மயங்கிவீழ்ந்துவிடும். பயிரை அழிக்க வந்த யானை இனிய கீதத்துக்குக் கட்டுப்பட்டு நின்றது என்று நம் பண்டைய இலக்கியம் சங்கீதத்தின் மகிமையை எடுத்துக் கூறுகின்றது.

“ரெக் அன்ரேல்” இனிய, சங்கீதமா அல்லது “கடமடா” சங்கீதமா என்ற விவாதத்தை விட்டுவிட்டு, ‘மேல்நாட்டவர் ரசிக்கும் சங்கீதம்’ என்று எண்ணி அதை எப்படி அவர்கள் பயன்படுத்துகிருர்கள் என்பதை ஆராய்வோம்.

“ரெக் அன் ரேல்” சங்கீதத்தைக் கேட்டதும் தானியங்கள் நன்கு விளைகின்றனவாம்!

அலாபாமாவில்ஜிம்மிகிரிப்பித், ஜோன்மார்ட்டின் ஆகிய இருவர் பரீட்சை நடத்திப் பார்த்திருக்கிருர்கள். அமைதியான இடத்தில்ஒருவயலும், மற்ருரிடத்திலுள்ளஒருவயலில் சதா ‘ரெக் என்ரேல்’ சங்கீதத்துக்கும் ஏற்பாடு செய்தார்கள். சங்கீதத்தைக் கேட்ட வயலிலுள்ள தானியம் 6 அங்குலத்திலிருந்து 8 அங்குலம்வரை வளர்ந்திருக்கும் அதேநேரத்தில் அமைதியான இடத்தில் அமைந்த வயலில் தானியங்கள் 4 அங்குலத்திலிருந்து-5 அங்குலம்வரை வளர்ந்திருந்தன. இங்குள்ள ஒரு உயர்தரக்கல்லூரி விஞ்ஞானக் காட்சியின் போது இப்பயிர்கள் காட்சிக்காகவைக்கப்பட்டிருந்தன.

சங்கீதத்தினுல் பயிர்களை விரைவாக வளரச்செய்ய முடியும் என்று சமீபத்தில் இந்தியாவில் ஆதாரபூர்வமாக நிருபிக்கப்பட்டது. அதனுல் இந்திய விஞ்ஞானி ‘இனிய சங்கீதம்’ என்று கூறினுர்.

தென்னிந்தியாவிலுள்ள அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தாவரப்பகுதித் தலைமைப்பேராசிரியர் ரி. சி. என். சிங் சமீபத்தில் இதுபற்றிய தமது நிருபணங்களை இந்திய விவசாய அதிகாரிகள் முன் சமர்ப்பித்தார்.

இனிய சங்கீதத்தின் பயனுக நெற்பயிர் விளைச்சல் 28 தொடக்கம் 60 வீதம் உயர்ந்திருப்பதை இந்திய விவசாய அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

மின்சாரத்தில் ஒலிக்கும் மணிச்சத்தம் கூடப் பயிர்களைத் திகைப்படையச் செய்யும் என்று பேராசிரியர் சிங் கூறுகிருர்.

# ழுதிய மாணவி

## க்கத் தடை!

த்தது. 'என்னல் ரதிகா
தந் தண்டனையா?' அவ
ல் நம்பவே முடியவில்லை.
மாறியபடியே "ரீச்சர்..."
ருள்.

திகா முந்திக்கொண்டாள்.
மாம் ரீச்சர். நிருபா நிரப்
. "அவளை நான் பார்த்
ழுதியது அவளுக்குத் தெரி
. நான் செய்த குற்றத்



**நிருபாவும் ரதிகாவும் உயிர்த் தோழிகள். ஏழையான நிருபாவுக்காக செல்வச் சீமாட்டி ரதிகா அப்பிளிக்கேசன் பணத்தைக்கட்டினுள். அதற்குப் பதிலாக நிருபா உதவி செய்ய முனைந்தபோது தான் ஆபத்து வந்தது!......**

தண்டனையை நானே
விக்கிறேன். ஒருபாவ
அறியாத அவளுக்குத்
னை விதிக்காதீர்கள்.
பாவினுல் துணிந்து
மையைக் கூற முடிய

## பததியாகம்

அவளுடைய வாழ்க்
பிரச்சனையே அந்தப்
ரீட்சையில்தான் தங்கி
றது. அல்லாமலும்
தெழுதுவது மட்டுமா
. கொப்பியடிக்க உதவி

யவளும் குற்றவாளிதானே. தண்டனை இருவருக்கும் விதிக்கப்பட்டிருந்தாலாவது நிருபா நிம்மதியடைந்திருப்பாள். ரதிகாமட்டும் தண்டனை அனுபவிப்பதென்ருல்......

'சீ, என்ன சுயநலம்! உள்ளம் பொருமியது. கண்கள் நீரைப் பெருக்கின. ஆனல் சிரித்தபடியே சிறிதும் கவலையின்றி முன்னல் வந்து நிற்கிருள் ரதிகா.

"என்ன நிருபா, சிரிக்கமாட்டாயா? நீ அழுதால் நானும் அழுவேன்."

"நான்தானே குற்றவாளி நீ ஏன் ரீச்சரிடம் பொய் கூறினுய் ரதிகா..."

"பைத்தியமே. பள்ளிப்படிப்பு எனக்கொரு விளையாட்டு. அப்பா ஒன்றும் என்னைக் கோபித்துக் கொள்ளமாட்டார். அல்லாமலும் நாளை அப்பா பாடசாலைக்கே படையெடுத்துவிடுவார். அப்பாவின் தலைக்கறுப்பைக்கண்டதும் பிரின்சிப்பல் "ததிங்கின தோம்" போடுவார். நீயே பாரேன் நிச்சயம் நான் உன்னேடு பரீட்சைக்குத் தோன்றத்தான்போகிறேன். என்கதி உனக்கேற்பட்டிருந்தால் உன் அம்மா எவ்வளவு கவலைப்படுவாள் என்பது எனக்குத் தெரியாதா..." அன்போடு ரதிகாவின்கைகள் நிருபாவின் கன்னங்களில் வடிந்தகண்ணீரைத் துடைத்தன. துயர் துடைக்கும் அந்தக் கரங்களை உணர்ச்சியோடு பற்றிப்பிடித்தாள் நிருபா. அவளால் வாய் திறந்து ஒன்றுமே பேச முடியவில்லை.

# நியூட்டனுக்கு முந்திய தமிழ்நாட்டு விஞ்ஞானி

## பொருள்களின் இயக்க முறைமையை அறிவித்த மாணிக்கவாசகர்!

பொருள்களின் இயக்கம் (Dynamics) பற்றிய உண்மைகளை உணர்ந்து உலகத்துக்கு உரைத்துப் பெருமை கொண்டவர் அறிஞர் நியூட்டன் (Sir Issac Newton) என நாம் கேள்விப்படுகின்ருேம். "வேற்று விசையால் தூண்டப்படாத வரையில் நிற்கின்ற பொருள் நின்றுகொண்டே இருக்கும்; ஓடுகின்ற யின்படி, "அதே வேகத்தில் அதே திசையில்" ஓடிக்கொண்டே இருக்கவேண்டும்! இப்படி நிகழ்ந்தால், எல்லாக் கோள்களும் இமைப் பொழுதில் வெளியின் எல்லையற்ற ஆழத்திலே சென்று கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து விடும்! ஆனல் நடைமுறையில் அப்படி நிகழ்வதில்லை; ஏதோ ஒரு

### 17-ம் நூற்றுண்டில் நியூட்டன்

பொருள் அதே வேகத்தில்; அதே திசையில் ஓடிக்கொண்டே இருக்கும்" என்று அவர் கூறினர். இதனையே நியூட்டனின் முதலாம் இயக்க முறைமை (First law of motion) என்று நாம் சொல்கிருேம். இந்த முறைமையின் அடிப்படையில்தான் உலகத்தில் செயல் படும் பல வகை ஆற்றல்களையும் பற்றி (Forces) அறிந்துகொள்ள வாய்ப்புஏற்பட்டது. எடுத்துக்காட்டாக, நாம் மேசையின்மீது ஒரு பொருளை நகர்த்திவிட்டால், இம் முறைமையின்படி அது நகர்ந்துகொண்டே இருக்கவேண்டும்! ஆனல். அது அப்படிச் செய்வதில்லை; வர வர வேகம் குறைந்து நின்று விடுகின்றது! இதிலிருந்து "வேற்று விசை" ஒன்று (Externel force) அப்பொருளைத் தாக்குகின்றது என்று முடிவு செய்கின்ருேம், அந்த விசையையே எதிர்பு விசை (Friction) என்று பெயரிட்டு அழைக்கின்ருேம். இதேபோன்று கோள்களெல்லாம் இம்முறைமை

விசை கோள்களெல்லாம் ஒரே வேகத்தில், ஒரே திசையில், ஓடி மறைந்துவிடாமல் இழுத்து வைத்துக் கொண்டிருக்கின்றது என்று முடிவு செய்கின்ருேம். அதனையே கவர்சியாற்றல் (gravitational force) என்று பெயரிட்டு அழைக்கின்ருேம். சுருக்கமாகக் கூற வேண்டுமானுல், 'ஆற்றலின்றி ஒரு பொருளும் அசையாது என்ற உண்மைக்கு அடிப்படையாக நியூ

வன் என்று அழைத்தல் மக்கள் இயல்புதானே? எனவே, தமிழகத்திலும் ஓர் இயக்க முறைமை இதற்கு அடிப்படையாக இருந்திருக்க வேண்டுமன்ருே? தமிழகத்தின் அந்த நியூட்டனைத் தேடிக்கொண்டு நாம் நீண்ட தொலைவு செல்லவேண்டியதில்லை! இதோ வருகின்ருர் மணிவாசகர். அவர் கூறும் பொருள்களின் இயக்க முறைமையைக் கேளுங்கள்!

"நடப்பன நடாஅய்
கிடப்பன கிடாஅய்
நிற்பன நிறுவி
சொற்பதங் கடந்த
மேலோன்."

(திருவாசகம்)

சொல்லாலும் வடித்துக் கூற முடியாத இயற்கை முறைமை எது என்பதை மேலே காட்டிய வரிகளில் விளக்குகின்ருர்; நடக்கும் பொருள் நடந்துகொண்டே இருக்கும்; கிடக்கும் பொருள் கிடந்தபடி

### 3-ம் நூற்றுண்டிலேயே மாணிக்கவாசகர்!

ட்டனின் இவ்வியக்க முறைமை அமைந்து கிடக்கின்றது. ஆனல், தமிழகத்தில் நியூட்டன் பிறப்பதற்குப் பல நூற்றுண்டுகட்கு முன்னரே, "அவனன்றி ஓரணுவும் அசையாது." என்ற பொன் மொழி எவர்க்கும் தெரிந்த ஒன்ருகவன்ருே இருந்தது! ஆற்றலைக் கடவுளாகக் கண்டு அதனை ஆண்பாலாக்கி, அ

யே இருக்கும்! நியூட்டன் 17-ம் நூற்றுண்டிலே வந்தவர்; மணிவாசகர் கி.பி. மூன்ரும் நூற்ருண்டிலே வாழ்ந்தவர்! இருந்தாலும் பொருள்களின் இயக்க முறைமை கண்ட பெருமை தமிழர்க்குக் குரலிலே வலிமை இல்லாத காரணத்தால், இன்றும் நியூட்டனையே சார்ந்திருக்கின்றது! — 'கலைக்கதிர்'

## எழுத்தாளர் மத்தியில்

சென்ற சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் ஒரு இலக்கிய நண்பர்கள் கூட்டம் நடந்தது. 'தினகரன்' கைலாசபதி அவர்கள் பல்கலைக்கழக விரிவுரையாளராக மாறுவதன் காரணமாக ஏற்பட்ட ஒரு 'பாராட்டுக் கூட்டம்' அது. அந்தக் கூட்டத்தில் பேசிய எழுத்தாளர்கள் பலர் சுவையான சில சம்பவங்களைக்குறிப்பிட்டார்கள். திரு. கனகசெந்திநாதன் சொன்ன சங்கதி இது:

திரு. செந்திநாதன் ஒருநாள் ஒரு பத்திரிகைக் கடைக்குப் போனுராம். அங்கே நின்றுகொண்டிருந்த ஒரு 'மாஜி' பத்திரிகையாசிரியருக்கு செந்திநாதனைக் கடைக்காரர் அறிமுகம் செய்தாராம். உடனே அந்த 'மாஜி' பத்திராதிபர் 'அடியடா பிடியடா!' என்று தொடங்கிவிட்டாராம். 'உவனுக்கு என்ன தெரியும்? கணபதிப்பிள்ளைப் பண்டிதருக்கு 'பண்டிதமணி' பட்டம் நானெல்லோ குடுத்தது. 'கல்கி' தான் குடுத்ததென்று உவன் எழுதியிருக்கிருன்! 'பேனுமன்னர்'களை அறிமுகம்செய்தான்; பெரியவன்களையெல்லாம் விட்டுவிட்டு கண்டவன் நிண்டவனையெல்லாம் எழுதியிருக்கிருன். உவனும் ஒரு ஆளா....' என்று இன்னும் எழுத முடியாத வார்த்தைகளையெல்லாம் ஒருகாலத்தில் 'சிவபெருமான் தலையிலிருந்த, அந்த'அவர்' கக்கிருராம்!

திரு. செந்திநாதனுக்கு அப்பத்திரிகைக் கடையில் நின்று இலக்கிய விவாதம் செய்யத் தெரியாதபடியால் போலும், இலக்கிய நண்பர்கள் கூட்டத்தில்இதைஅவிழ்த்துவிட்டார்!

* *

இந்த இலக்கிய நண்பர் கூட்டத்துக்கு அடுத்தநாள் யாழ் நகர மண்டபத்தில் 'சமூகத் தொண்டன்'மலர் வெளியீட்டு விழா நடைபெற்றது. சிறுகதைப்போட்டிக்கு பரிசளிக்க வந்த நீதிபதி கலாநிதி தம்பையா அவர்கள் 'நாவல் போட்டி' ஒன்று நடத்தவேண்டும்; எழுதுகிறவர்கள் அதை அச்சிட்டு விற்பதனுல் பணத்தையும்ஈட்டிக்கொள்ளலாம், என்று குறிப்பிட்டார். 'நீதிபதியவர்களுக்கு உள்ளூர் சமாச்சாரம் தெரியவில்லையே! இங்கேஇலக்கியப்புத்தகம் அச்சிட்டவர்கள் லாபமா எடுக்கிருர்கள்? அச்சிட்ட செலவைக் கொடுக்க முடியாமல். 'உடும்பு வேண்டாம் கையை விட்டால் போதும்!' என்ற நிலையிலல்லவா இருக்கிருர்கள்! என்று சபையிலிருந்த ஒரு அனுபவசாலி முணுமுணுத்தது என் காதில் விழுந்தது!

— நக்கீரன்

# ' வகையானதா?

# ளர்கின்றனவே!

ாக வளரச்செய்ய முடி
ன்று சமீபத்தில் இந்தி
ஆதாரபூர்வமாக நிரு
பட்டது. அதனுல் இங்
ஞ்ஞானி 'இனிய சங்கீ
ன்று கூறினுர்.

ஒனிந்தியா விஞ்ஞனள
மலைப் பல்கலைக் கழகத்
பகுதித் தலைமைப்பே
ர் ரி. சி. என். சிங் சமீ
இதுபற்றிய தமது

நிரூபணங்களை இந்திய விவசாய அதிகாரிகள் முன் சமர்ப்பித்தீர்.

இனிய சங்கீதத்தின் பயனுக நெற்பயிர் விளைச்சல் 28 தொடக்கம் 60 வீதம் உயர்ந்திருப்பதை இந்திய விவசாய அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

மின்சாரத்தில் ஒலிக்கும் மணிச்சத்தம் கூடப் பயிர்களைத் திகைப்படையச் செய்யும் என்று பேராசிரியர் சிங் கூறுகிருர்.

திறம் சலவைக்கு
மில்க் வைற் சோப்


மில்க் வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்

● 'மில்க்வைற் நீலசோப்'
உங்கள் சலவை வேலையைத் திருப்திகரமாகப் பூர்த்தி செய்கிறது
● 'மில்க்வைற் நீல சோப்'
என்று கேட்டு வாங்குங்கள்

# பெண்களின் முத்தம் இனிமையானதே!

## ஆனால் விபரீதமும் விளைகிறது!

ஒரு அழகியின் தொடையில் முத்தமிட்டதால் பெரிய யுத்தமே ஏற்பட்டுப் பல்லாயிரக் கணக்கானோர் மாண்டனர். இது நடந்தது 1703-ம் ஆண்டில். பாவேரியா மன்னன் பேடினன்ட் மற்றோர் இராச்சியத்துக்குச் சென்றபோது அங்குள்ள ஒரு நந்தவனத்தில் ஓர் பேரழகியைக் கண்டான். மையல் கொண்ட அவன் ஓடோடியும் சென்று அவளது தொடையை முத்தமிட்டான். துரதிர்ஷ்ட வசமாக அவள் ஒரு அரசிளங்குமரி—இன்னொரு அரசகுமாரனுக்கு நிச்சயிக்கப்பட்டிருந்தாள் பேடினன்ட் முத்தமிடும் சமயத்தில் அவளை மணம் செய்யவிருந்த அரசகுமாரன் வந்துவிட்டான். வந்துவிட்டது ஆபத்து. இருவரும் சூடான வார்த்தைகளைப் பரிமாறிக் கொண்டனர். வாள்கள் ஒன்றோடொன்று மோதியதால் இருவரும் காயமடைந்தனர். இதோடு அவர்கள் விவகாரம் முடியவில்லை. இரு அரசாங்கத்துக்கிடையேயிருந்த அரசியல் உறவுகள் துண்டிக்கப்பட்டு பெரியதோர் யுத்தமே மூண்டு விட்டது.

* *

களவாகக் காதலியை முத்தமிடப்போன காதலனின் தலை ஜன்னல் கம்பிகளுக்குள் அகப்பட்டு விஷயத்தை அம்பலப்படுத்திவிட்டது. பலமணிநேரம் கம்பிக் கிடையில் கழுத்தைக் கொடுத்துக்கொண்டிருந்த காதலனுக்குக் காதலிமீதுதான் கோபம் கோபமாய் வந்தது கவலையீனமாகத் தன்னைமுத்தமிட்டதாக அவள்மீது குற்றம் சாட்டி கோட்டில் வழக்குத் தொடர்ந்தான். இச் சம்பவம் ஸ்பெயினில் நடந்தது.

* *

பெல்ஜியத்திலுள்ள ஒருசினிமாக்கொட்டகையில் ஒருவன் எதிர்பாராவிதமாகத் தன் காதலியைச்சந்தித்ததும் ஓடிச்சென்று அவளைக் கட்டியணைத்து முத்தமிட்டான். பின் ஆசனங்களிலிருந்து படம் பார்த்தவர்கள் இவர்கள்படத்தை மறைக்கிறார்கள் என்ச் சப்தமிட்டார்கள். முத்தத்தை நிறுத்த மனமில்லாதகாதலன் அவளைஅணைத்தபடியே கொஞ்சம் உடலை வளைத்து ஒருக்களித்தான். அவ்வளவுதான் ஒருகை பூட்டுக் கழன்றுவிட்டது.

* *

ஸ்கொட்லான்ட்டைச் சேர்ந்த ஒரு 17 வயதுப் பையன் தன்காதலியைமுத்தமிட்டான் திடீரென்று அவள் மயங்கி வீழ்ந்துவிட்டாள். டாக்டர் வந்து பரிசோதித்துப் பார்த்தபோது பாவம் அவளது மூக்கு உடைந்திருந்தது

புடாப்பெஸ்டில் சமீபத்தில் ஒரு வழக்கு நடந்தது. கவலையீனமாகத் தன்னைத் தன் காதலன் முத்தமிட்டதால் தன் அலகுஉடைந்துவிட்டதென்று கூறி ஒரு யுவதி காதலனிடம் நஷ்டஈடு கோரினாள்.

* *

ஒரு பெண்ணுடைய விருப்பத்துக்கு மாறாக அவளையாராவது முத்தமிட்டால் முத்தமிட்டவனின் மூக்கைக் கடிக்க அவளுக்குச் சட்டபூர்வமாக உரிமையிருக்கிறதெனச் சமீபத்தில் ஒரு பிரிட்டிஷ் நீதிபதி கூறினார்.

பலாத்காரமாக ஒரு யுவதியை முத்தமிட்ட வாலிபனின் மூக்கை அவள் பதம்பார்த்துவிட்டாள். மூக்கிழந்தவன் நஷ்டஈடு கோரி தொடர்ந்தவழக்கில் தீர்ப்பளிக்கும்போதுதான் நீதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மெடலின்டீபிரின்விலியேஸ் பேரழகி; ஆனால் கொலைகாரியென்று பெயரெடுத்தவள். பிரான்ஸைச்சேர்ந்த இவள் ஒரு சமயம் தனதுமுத்தத்தால் தன் கணவன், தந்தை, இரண்டு சகோதரர்கள் அனைவரையும் தீர்த்துக்கட்டிவிட்டாள். தன் கள்ளக்காதலனுக்காகவே அவள்இவர்களைக்கொலைசெய்தாள்

பல்சுவைப் புதினம்

# தாகூரின் ஓவியக் காட்சிக்கு

## இரு லட்சம் ரூபா வசூல்!

ரவீந்திரநாத் தாகூர் ஓர் கவிஞன்; பெர்னாட் ஷா ஒரு நாடக ஆசிரியன்; இருவர்களுமே இலக்கியப் பிரிவின் கீழே நோபல் பரிசு பெற்றனர்.

இவ்வளவுதான் இன்று பலருக்கும் இருவரைப் பற்றியும் தெரிந்திருக்கிறது. ஆனால் இருவர்களும் சிறந்த ஓவியர்கள் என்பதை இன்று பலர் அறியவில்லை. ரவீந்திரநாத்தாகூர் காவியம்பாட முன்பு ஓவியம் வரைவதைத்தான் தனது பொழுதுபோக்காகக் கொண்டிருந்தார்.

அறிஞர் பெர்னாட்ஷாவின் நாடகங்களுக்குப் போடும் திரைகள் எல்லாம் ஷா இருந்து தனிமையாக வரைந்ததே.

ரவீந்திரநாத் தாகூர் வரைந்த ஓவியங்கள் சிலவற்றைக்கொண்டு ரஷ்ய அரசாங்கத்தினர் பொருட்காட்சி ஒன்றை உண்டு பண்ணினர். அந்தக் காட்சியில் சேர்ந்த தொகை இரண்டு லட்சம் ரூபா! பாருங்கள் அவர் ஓவியத் திறமையை.

* *

விற்பனைக்கிருக்கும் ஓர் சைக்கிளின் விபரம் பின்வருமாறு:

'ரலி' சைக்கிலின் 'மட்காட்'; 'ஹம்பர்' சைக்கிலின் 'ஸீட்'; 'மொணரு' சைக்கிலின் 'றிம்'; புது பெல்டோம் (யாழ்ப்பாணம் மீன் கடைக்கு முன்னால் இருந்த சைக்கிலில் களட்டப்பட்டது.) அருமையான டைனமோ! ஆனால் எரியாது! அவ்வளவுதான்!

குறிப்பு: பெடல் இல்லை.
பிற்குறிப்பு: இச்சைக்கிலில் ஓடுவதிலும் பார்க்க இதைத் தூக்கிக்கொண்டு ஓடுவது மிகவும் சுலபம். சைக்கிலைப் பார்க்க விரும்புபவர்கள் பொலீஸ் ஸ்டேசனில் 'கள்ளச்சாமான்'கள் வைக்கும்அறையில் பார்வை இடலாம்.

[விளம்பரம் கொடுத்தவர் தற்பொழுது அங்கொடை ஆஸ்பத்திரியில் இருக்கிறார். அவர் ஒரு முறை தப்பி வந்தபொழுதே மேற்கண்ட விளம்பரம் கொடுக்க நேரிட்டது.]

'ரமணன்' தொகுத்தது

* *

"இந்த உலகிலே எந்தத் துணிவிருந்தாலும், மக்களை திட்டும் துணிவுதான் மிகவும் பயங்கரமானது!" என ஓர் ஆங்கிலேயன் கூறினனும்.

அந்தத்துணிவு ஓர் இலங்கை, அதுவும் யாழ்ப்பாண 'அட்வகேற்'றிடம் இருந்ததென்றால் நீங்கள் எல்லாம் மூக்கில் தான் கைவைக்கவேண்டும்.

அது ஓர் இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்காலம். வட மாகாணத்தில் அந்த 'அட்வகேட்'டும்ஓர் அபேட்சகராகப் போட்டியிட்டார். யாழ்ப்பாண மாநகரசபையில் வாக்குகள் எல்லாம் எண்ணி முடிந்துவிட்டன. அம்முறை அந்த 'அட்வகேட்'டுக்கு தோல்வி. தோல்வி அடைந்தவர்களும் இறுதியில் நகரசபை 'பல்க'னியில் நின்று பேசும் வழக்கம் அப்பொழுது இருந்தது: ''தாய்மார்களே, சகோதரசகோதரிகளே, இங்கு குழுமியிருக்கும் பெருமக்களே!'' என்று பலவிதமாகத் தோல்வியுற்ற அபேட்சகர்கள் தமது பேச்சைத் தொடங்கினார்கள்.

இறுதியில் அந்த அட்வகேட் வந்தார். பின்வருமாறு அவரது வசனங்கள் உதிர்ந்தன:

## "காகிதச் சருகுகளே, அறிவற்ற மூடர்களே..."

### — ஒரு தோல்வியுற்ற அபேட்சகர்

''வகுப்புவாதம் எனும் மாயைக்கு அடிபணிந்து அறிவற்றவர்களாகி இங்கு வந்து குழுமியிருக்கும் காகிதச் சருகுகளே! அறிவற்ற மூடர்களே!......''

அவ்வளவுதான்!

அங்கு குழுமியிருந்த மக்கள் எழுப்பிய எதிர்ப்புக் குரல் வானத்தைப் பிளந்தது! பின்னர் பொலீசாருக்கு இவரைப் பத்திரமாய் வீடுகொண்டுபோய் சேர்ப்பதே பெரிய கஷ்டமாய் போய்விட்டது!

எது எப்படி இருந்தாலும், இவரது துணிவு மெச்சத்தக்க துணிவு தானே!

* *

இராமகிருஷ்ணபரமஹம்சரை ஒரு நாஸ்திகன் பின்வருமாறு கேட்டான்: ''கடவுள் உண்டு கடவுள் உண்டு என்கிறீரே? உம்மால் அவரைக் காட்ட முடியுமா?''

இராமகிருஷ்ணர் சிரித்துக்கொண்டே பதில் சொன்னார்:

''இல்லைத்தம்பி, இரவிலே பல நட்சத்திரங்களை நீ வானில் காண்கிறாய். காலையில் சூரியன் உதித்தவுடன் அவற்றைக் காண்பதில்லை. அதற்காகப் பகலிலே நட்சத்திரங்கள் இல்லையென்று சொல்லி விட முடியுமா? அவ்வாறே நீ அஞ்ஞான உலகில் இருக்கும்பொழுது சர்வ சக்தி வாய்ந்த இறைவனை காண்பதில்லை. அதனால் 'இறைவனே இல்லை' என்று முடிவு செய்யலாமா?''

* *


எமது பத்திரிகை (உணவுப்பகுதி)நிருபர் ஸ்ரீமான் 'சாப்பாட்டு ராமன்' அவர்கள் ஓர் உணவு விடுதியில் பத்து வருடங்களாகத் தங்கிய மாணவனைப் பேட்டி கண்டபொழுது அவன் தனது அநுபவத்தைக்கொண்டு கூ[illegible]து

## 'புட்டு'க்கு ஒரு பாட்டு!

மொழிகள் பின்வருமாறு-

புட்டே புதுவாழ்வு!
சோறே சொர்க்கம்!
பாணே பரலோகம்!
இடியப்பமே இன்பம்!
கத்தரிக்காயே கைலாயம்
(மாணவன் இதைக் கூறிக் கொண்டே கைலாயம் சென்றுவிட்டான்!)

காதலும்.........



.........மோதலும்

# இலங்கையிலே இவ்வாரம் ...

● மகாவலி கங்கையை வடக்கே திரும்பும் முயற்சி கைகூடும் தறுவாய்க்கு வந்துவிட்டதென்பது அமெரிக்கா சென்றுதிரும்பிய காணியமைச்சர் சி.பி.டி. சில்வாவின் பேச்சிலிருந்து வெளியாகியுள்ளது. அரசியல் வாதிகளின் நீண்டநாள் உபதேசமாக இருந்து வந்த இத்திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர அமெரிக்க சர்க்கார் நிதியுதவ முன்வந்துள்ளதாம். ஆனல் வடமாகாணம் வரை அது திசை திருப்பப்படமாட்டாதென்று இப்போது தெரிகிறது:

## மொழிச்சட்ட குழு அறிக்கை.

● சிங்களம்மட்டும் சட்ட நடைமுறையால் ஏற்பட்டுள்ள சிக்கல்களை ஆராய நியமிக்கப்பட்ட அரசாங்க அதிகாரிகள் குழு தனது அறிக்கையைப் பிரதமரிடம் சமர்ப்பித்து விட்டது. அரசாங்கம் ஆங்கிலத்தில் மட்டுமே பொதுமக்களுடன் தொடர்புகொள்ளவேண்டும்; அரசாங்க பிரசுரங்கள் யாவும் தமிழ் சிங்களம் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் இருக்கவேண்டும் என்பன உட்பட அது நடைமுறைக்கு அத்தியாவசியமானவையெனக் கருதப்படும் பல முக்கிய சிபார்சுகளைச் செய்துள்ளது. கமிட்டி உறுப்பினர்களில் ஒருவரான டாக்டர் விஜயசேகரா இச் சிபார்சுகளுக்கு மாறுபட்ட தனி அறிக்கையொன்றைக் கொடுக்க முன்வந்திருக்கிறர்.

## பல்கலைக் கழக வெளி மாணவர் படையெடுப்பு

● இலங்கைப் பல்கலைக்கழக வெளிமாணவர் வகுப்பில் படிக்க நாட்டின் பலபாகங்களிலிருந்தும் பெருந்தொகையான மாணவர்கள் படையெடுத்துச் சென்றுள்ளனர். இதனுல் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, சுன்னகம் இராமநாதன் அக்கடமி என்பன நடத்திய பல்கலைக்கழக வெளி மாணவர் வகுப்புகளின் கதி அதோகதியாகிவிட்டது. அங்கு படித்தவர்களில் ஒரு சிலரைத் தவிர ஏனையோர் பெரதெனியாவைப் பார்த்து நஷ்டயைக்கட்டி விட்டார்கள். பெரதெனியாவில் ஏற்பட்ட இடநெருக்கடி ஒரு புறமிருக்க மேற்படி வகுப்புகளில் தமிழ்மூலம் கல்வி கற்பதற்குப் போதியளவு நூல்கள் இல்லையென்ற புதியபிரச்சனையொன்றும் திடீரெனக் கிளம்பியிருக்கிறது. பல்கலைக் கழக வெளிவகுப்பு மாணவர்களை வரவேற்ற பேராசிரியர்கள் அவர்களுக்குத் தெரிவித்த புத்திமதியொன்று இங்கு சுட்டிக்காட்டப்படத் தக்கதாகும். ''இப்பல்கலைக் கழகத்தின் பாரம்பரியத்துக்கு இழுக்கு நேராமல் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். இதேபல்கலைக்கழகத்தைப்பற்றி அதன் முன்னை நாள் உப அத்தியட்சகரான டாக்டர் ஜவர்ஜெனிங்ஸ் ஒரு தடவை என்ன சொன்னர் தெரியுமா? ''உலகிலேயேமிகக்கேவலமான ஒரு காடையர் உலகம்'' என்றல்லவாவர்ணித்தார். ஒருவேளை பேராசிரியர்கள் தெரிவித்த பாரம்பரியம் இதுவாகவும்இருக்கலாம்.

## பணங் கொண்டு செல்ல மாணவருக்கு மறுப்பு

● இந்தியாவில் கல்வி கற்கச் செல்லும் மாணவர்களுக்கு நாணய பர்மிட் வழங்க இலங்கை அரசாங்கம் மறுத்து விட்டதாம். இதனுல் 400 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத்தெரிகிறது. மற்றும் 100 பேருக்கு பாஸ்போட் கிடைக்கவில்லையாம்.

## இந்திய பீடி இறக்கு மதிக்குத் தடை

● இந்தியபீடி இறக்குமதிக்கும் இலங்கை அரசாங்கம் முற்றுப் புள்ளி வைத்துவிட்டது. ஆகஸ்ட் மாதத்துடன் இறக்குமதியை நிறுத்துமாறு வர்த்தக அமைச்சர் உத்தரவிட்டிருக்கிறர். இந்தத் தடையினுல்தான் மலையாளப் புகையிலை ஏற்றுமதிக்கு விலங்கு வந்தது என்று யாழ்ப்பாணம்-மலையாளம்புகையிலை வர்த்தக சங்கம் சிறிது காலமாகக் கூவலை தெரிவித்து வருகிறது.

## ஆஸ்பத்திரி விசாரணைக் குழு

● ஆஸ்பத்திரிநிர்வாகம் பற்றி விசாரணை நடத்த நியமிக்கப்பட்டிருக்கும் குழு இயங்க ஆரம்பித்துவிட்டது. மக்களிடம் அது முறைப்பாடுகளை எதிர்பார்க்கிறதாம். அதேசமயம் இ. போ. ச. விசாரணைக் கமிஷனும் மனுக்கள் தாருங்களென மக்களிடம் விண்ணப்பித் திருக்கிறது. இந்த நிர்வாகங்களுக்குப் புதுச்சக்தியூட்ட முற்பட்டிருக்கும் சமயம் பார்த்துத்தபால் இலாக்கா நிர்வாக யந்திரம் ஆமை வேகத்தை அமுல் நடத்த முற்பட்டிருக்கிறது. தபால் பட்டுவாடா வீண் சுணக்கத்துக்குள்ளாகிச் சீர்குலைந்திருக்கிறது.

## பேராசிரியர் வெளியேற்றம்.

● இலங்கைப் பல்கலைக் கழகத்தில்நடக்கும்பேராசிரியர்கள் வெளியேற்றம் இன்னும் ஓய்ந்தபாடில்லை. இலங்கையரான பேராசிரியர்களே ராஜினாமாவை நீட்டினர்கள். இவ்வாரம் இந்தியரான அரசியல் பகுதிப் பேராசிரியர் கே. பி. முகர்ஜியும் பதவி துறந்து விட்டார். மற்றொரு பேராசிரியருக்கு அநீதி இழைக்கப்பட்டுவிட்டதை உணர்த்தவேதானும் விலகுவதாக அவர் தெரிவித்திருக்கிறர்.

## தமிழில் வரவுசெலவுத் திட்டம்.

● கடந்தஆண்டு சிம்மாசனப்பிரசிங்கத்தில் காணப்பட்ட மாற்றம் இம்முறை வரவுசெலவுத்திட்டத்திலும்நிகழப்போகிறது. அப்படிப் பிரமாதமான புதுமை எதுவும் இல்லாவிட்டாலும் தமிழில்வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவிருக்கிறதென்பது இலங்கையைப் பொறுத்தவரை இலேசான காரியமல்லவே.

## லட்சுமி தோட்ட துப்பாக்கிப் சம்பவம்

● நாவலப்பிட்டி இலட்சுமி தோட்டத் துப்பாக்கிப் பிரயோகம் பற்றிய கமிஷன் விசாரணைச் செய்திக்குப் பத்திரிகைகள் நல்ல முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்து வருகின்றன. பிரதமர் பண்டாரநாயக்கா கொலை வழக்கின்பின் நிகழும் மற்றொரு முக்கியவிசாரணை இதுவாகும். கொமிஷனர்கொன்ரட்பெரேரா தலைமையில் நடக்கும் இந்தவிசாரணையில் ஜீ. ஜீ பொன்னம்பலம் கியூ. சி. யும் காங்கிரஸ் சார்பில் வழக்கறிஞராகஆஜாராகியிருக்கிறர். தோட்டத் தொழிலாளர்நால்வரைப் பலிகொண்ட ஒரு துப்பாக்கிச் சம்பவம் இதுவாகும்.

## காகரின் இங்கு வருகிறர்.

● வானவெளிப்பயணத்தில் புதுமையைச் சாதித்த காகரின் இலங்கைக்குவிஷயம் செய்யக்கூடும். ரஷ்யா இலங்கை நட்புறவுச்சங்கம் அவரை அழைத் திருக்கிறது.

# மிஸிஸ் கடிறவேலின் சிகை அலங்காரம்

—'சிவாஜி'



## 'எடின்பரோ கோமகன் சினிமாவில் சேர்ந்தால்....'

''நான்மட்டுமல்ல பல பெண்கள் எடின்பரே கோமகன் பிலிப்பைப் பற்றிச் சதா சிந்தித்துக் கொண்டேயிருக்கிறர்கள். இவர் மிகவும் கவர்ச்சியான தோற்றமுள்ளார்,இனிமையாகப் பேசக் கூடியவர். அழகானவர், நடிப்புலகில் மட்டும் இவர்புகுந்து விட்டால் தன்னிகரற்ற நடிகராக இவர் திகழக் கூடியவர்'' என்று சமீபத்தில் ஒரு ஆங்கிலப் பெண்மணி கூறினர்.

நீங்களே வழி சொல்லுங்கள்:

# குழந்தை இல்லாத குறைதீர்ந்தது. ஆனால்-

## பெற்றவள் அஞ்சி நடுங்கினாள் — ஏன்?

ஏழு வருடங்கள் மலாயாவில் மணவாழ்க்கை நடத்தியும் அவர்களுக்குக் குழந்தை கிடைக்கவில்லை. இருவருக்குமே இதுதீராக் குறையாயிருந்தாலும் கணவன் அதைப்பொருட் படுத்தியதாகக் காட்டிக் கொள்ள வில்லை. பெண்கள் அப்படியல்லவே ...... கோயில் குளத்தை யெல்லாம் சுற்றி வந்தால், என்றாவது ஒரு நாள் வயிறு திறக்காதா வென்று ஏங்கிக்கிடந்தாள்.

இதற்கிடையில் இரண்டாவது யுத்தம் வந்து கோரநர்த்தனம்புரிந்தது. ஜப்பான்காரரின் அட்டூழியங்கள் பொறுக்கமுடியாமல் மக்கள் அல்லோலகல்லோலப்பட்டார்கள்.

ஒருநாள்......

அவளது முகம் பேயறைந்தது போல் காணப்பட்டது. அவள் சிரிப்புச் செத்துவிட்டது. யுத்தகாலச் செய்திகளால் திகிலடைந்துவிட்டாள் என்று நினைத்தான்கணவன். எவ்வளவோ தேறுதல் வார்த்தைகள் கூறினான். அவள் கண்களிலிருந்து நீர் சொரிந்ததேதவிர அவள் வாய் திறந்து ஒன்றும் பேசவில்லை. பேசமுடியாதநிலை.

வயிறுகனத்தது. வாந்தி எடுத்தாள். கணவன் ஆனந்த மிகுதியால் துள்ளிக் குதித்தான். ஆனந்தப்படவேண்டிய நேரத்தில் அவள் மட்டும் எதையோ பறிகொடுத்தவள்போல் சதா உட்கார்ந்து கண்ணீர் வடித்தாள்.

தலைப்பிள்ளையல்லவா, வெகு ஜாக்கிரதையாக அவளைக் கவனித்தான் கணவன். பாவம் அவனுக்கு விஷயந் தெரியாது. வயிறு நோவெடுத்தது. அவளை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றான். சுகப்பிரசவம் என்று டாக்டர் கூறியபின் தான் அவனுக்கு உயிர் வந்தது.

ஆண்குழந்தை, பிறந்ததும் அது'குவாகுவா' என்று கத்தியது. அவன் தந்தையாகிவிட்ட களிப்பில் உள்ளே ஓடிச்சென்று குழந்தையைப் பார்த்தான். சிறிய மஞ்சள் கண்கள். சப்பை மூக்கு... தலை சுற்றியது. திரும்பி மனைவியைப் பார்த்தான். அவள் எங்கோபார்த்தபடி இவ்வுலக நினைவற்றுக் கிடந்தாள்.

ஆம். யுத்தகால அவமானச் சின்னந்தான் அந்தக் குழந்தை [அவன் என்ன செய்திருப்பான். நீங்களே வழிசொல்லுங்கள்.]

உங்கள் பதில்களைச் சுருக்கமாகஎழுதி 26-7-61க்கு முன் எமக்குக் கிடைக்கக் கூடியதாக "நீங்களே வழி சொல்லுங்கள்" 'புதினம்' 226', காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்,

நாடோடிக்கதை:

## சுவர்க்கத்தில் ஏழைக்கு வரவேற்பில்லையா?

ஒரு காலத்தில் ஒரு ஏழைக் குடியானவன் செத்துப் போய்விட்டான். அவன் மிகவும் நல்லவன். அவன் சுவர்க்கத்தின் வாசலில் வந்து நிற்கும்போது, ஒரு பெரிய பணக்காரப் பிரபுவும் அங்கே வந்து சேர்ந்தார். அந்தச்சமயத்தில் ஒரு சாமியார் வந்து சுவர்க்கத்தின் கதவைத் திறந்து பணக்காரனை மட்டும் உள்ளே அனுப்பிவிட்டுப் பழையபடியும்கதவைப் பூட்டிவிட்டார். ஏழைக் குடியானவன் நிற்பதை அவர் கவனிக்கவில்லை. உள்ளே சென்ற பணக்காரனுக்கு ஏக தடல்புடலாக உபசாரம் நடந்தது. மேளதாளங்களுடன் அவனை வரவேற்றார்கள். பாட்டும் கூத்தும் அமர்க்களப்பட்டன. இவற்றையெல்லாம் வெளியே நின்ற குடியானவன் கேட்டுக் கொண்டிருந்தான், பாட்டும், மேள தாளங்களும் நின்றதன் பின்னர் ஒரு சாமியார் வந்து கதவைத் திறந்து குடியானவனை உள்ளே அழைத்துச் சென்றார். தன்னைவரவேற்பதற்கும் மேளதாளங்கள் முழங்குவார்கள்; பாட்டுப்பாடுவார்கள் என்றெல்லாம் குடியானவன் எதிர்பார்த்தான். ஆனால் அப்படியொன்றும் நடக்கவில்லை. இதைக் கண்ட குடியானவன் மிக்க ஏமாற்றத்தோடு சாமியாரைப் பார்த்து "பணக்காரனை பாட்டுப் பாடி வரவேற்றார்கள். ஆனால் என்னை அப்படி வரவேற்கக்காணோம் ஏன் இந்தப் பாரபட்சம்? பூலோகத்தில்தான் நியாயத்திற்கு விரோதமாகக் காரியங்கள் நடைபெறுகின்றன. சுவர்க்கத்திலும் அப்படித் தானா?" என்று கேட்டான். அதற்குச் சாமியார் பின்வருமாறு பதில் சொன்னார்:

"உனக்கு நாங்கள் வஞ்சகம் செய்யவில்லை. எல்லாரையும் போல நீயும் எங்களது பரிபூரணமான அன்பிற்குப் பாத்திரமானவன்தான். சுவர்க்கத்தில் பணக்காரன் அனுபவிக்கும் இன்பத்தையெல்லாம் நீயும் அனுபவிக்கலாம். ஆனால் பணக்காரனை வரவேற்பதற்கு ஏன் பாட்டுப் பாடி கொட்டு மேளம் கொட்டினார்கள் என்றால் உன்னைப் போன்ற ஏழைகள் தினந்தினமும் சுவர்க்கத்துக்கு வருகிறார்கள். பணக்காரனோ நூறு வருஷங்களுக்கு ஒரு முறை தான் வருகிறான் அதனால் தான்."




போன்: 474 : தந்தி: 'றைக்கிளீன்'

வடமாகாணத்தில் நாங்கள் மட்டுமே

விலைஉயர்ந்த உங்கள் உடைகளை

'பேத்குளோத்தைலின்'

திராவத்தினால்

பாதுகாப்பான முறையில்

'றைக்கிளீன்'

செய்து தருகிறோம்.

சூரியப்பிரகாஸ் டையேர்ஸ் & றைக்கிளீனேர்ஸ்

வடமாகாணத்தில் மிகப் பெரிய ஸ்தாபனம்.

பஸ்நிலையத்துக்கு முன்பாக, பெரியகடை, : : யாழ்ப்பாணம்.


நீங்களே வழிசொல்லுங்கள்:

**2-7-61 இதழில் வெளியான கதைக்குப் பதில்**

"தற்கொலை புரிந்திருப்பாள்"
பண்டாரநாயக்காமாவத்தை, கொழும்பு. கே. அஹமத்.

"கணேஷ் வெறுப்படைந்து வீட்டைவிட்டு வெளியேறியிருப்பான்"
மட்டக்களப்பு. க. நாகலிங்கம்,

"மூர்ச்சித்து வீழ்ந்தாள் கமலா"
கல்முனை. செ. நாகேந்திரம்,

"தன் கணவனைப்போன்ற உருவமுள்ள வேறுயாரோ வென்றெண்ணித் திகைத்தாள்"
மன்னார். ஐ. கமறுதீன்,

"மறுமணம் செய்ததை மறந்து 'அத்தான்' என்று அலறியபடியே அவனை அணைத்துக்கொண்டாள்"
வல்வெட்டி, பொ. தேவராசா,

"முன்னைய கணவனைக் கண்டதும் மூர்ச்சித்து வீழ்ந்தவள் பின்பு எழுந்திருக்கவேயில்லை"
திருகோணமலை. சபா-சொ. சிவானந்தம்,

"மனைவியின் நிலைமையைப் புரிந்துவிட்ட கணேஷ் பைத்தியம் பிடித்தவன்போல் வெளியே இறங்கி நடந்தான்"
புத்தூர். இ. இராசையா

"இன்னொருவனுக்கு வாழ்க்கைப்பட்டுவிட்டேன். என்னைத் தொடாதீர்கள் என்று கூறினாள்"
நெல்லியான் செல்வம்.

"முன்னைய கணவனைக் கண்டதும் தற்கொலை புரிந்து கொண்டாள்"
உடுப்பிட்டி. எஸ். யோகேஸ்வரன்,

"தன்னைமறந்து அவனைத் தழுவினாள்"
காரைநகர். கே. தெய்வேந்திரம்

"கணேசனின்கைக்குள் அடங்கினாள் கமலா. ஆனால் அவள் உடலைவிட்டு உயிர் பிரிந்துவிட்டது"
குருநகர். எஸ். ஜேசுதாசன்

"இறந்தகணவன் உயிர் பெற்றுவந்ததைக்கண்ட அதிர்ச்சியில் மயங்கி வீழ்ந்தாள்"
நீர்வேலி. மணிவண்ணன்

"திரௌபதை ஐவருடன் வாழவில்லையா என்றெண்ணி கணேசனையும் இன்முகம் காட்டி வரவேற்றாள் கமலா"
கட்டப்பிராய். இ. இராசரத்தினம்

"நிலைமையைத் தெரிந்துகொண்ட கணேஸ் அவளாவது வாழட்டும் என்றெண்ணி அவ்விடத்தை விட்டகன்றான்"
யாழ்ப்பாணம். நா. பத்மசிலன்,

மேற்படி வழிகளைச்சொன்ன இன்னும் சிலர்:
குமார்சிதம்பர், காரைநகர். கே. குஷிநாதன், காரைநகர். ரமணிசர்மா, நீர்வேலி. சி. கந்தவேல் யாழ்ப்பாணம். இளமாறன், யாழ்ப்பாணம் .ச. வசந்தகுமார், யாழ்ப்பாணம் க. சுப்பிரமணியம்,காரைநகர். கு, தியாகராசசர்மா நீர்வேலி.

## நாணம்

நாணம் பெண்களைக் காட்டிலும் ஆண்களிடமே அதிகமாகக் காணப்படுகிறது. ஒரு புதுமணப் பெண்ணைப் பாருங்கள் ஆரம்பத்தில் அவள் வெட்கப்படுபவள் போலக் காணப்பட்டாலும் மஞ்சத்தில் அவள் கொஞ்சிவிளையாடும்போது உச்ச நிலைக்குப் போய்விடுகிறாள். ஆண்கள் தயங்கும் எத்தனையோ நடவடிக்கைகளில் அவள் சிறிதும் தயங்காமல் முன்னேறி விடுகிறாள். ஒரு ஆண் டாக்டரின் பரிசோதனைக்கு அவள்உட்பட நேரும்போது அவளிடம் அதிகமான கூச்சம் என்றும் ஏற்படுவதில்லை. ஆனால் ஆண்கள், ஆண்டாக்டர்களிடமே தங்கள் மறைவான இடங்களைக்காட்டநேரும்போதுகூச்சப்படுகிறார்கள். சிலர் மயங்கிக்கூட விழுந்து விடுகிறார்களாம்.

சினிமாப்படப் பிடிப்பின்போது பலபேர் மத்தியில் இளம் நடிகைகள் தயக்கமில்லாமல் நிர்வாணமாகப் 'போஸ்' கொடுத்து விடுகிறார்கள். அதேநேரத்தில் 'சேட்' இல்லாமல் நடிப்பதற்கே சிலஆண் நடிகர்கள் கூச்சப்படுகிறார்களாம்.

# நடிகைகள் வெட்டிப் போட்ட கூந்தலை

## பாபர் சலூனில் சேகரிக்கும் விசிறிகள்!

சினிமா நட்சத்திரங்களிடம் கையெழுத்து வாங்குவதுஇப்பொழுதுபழங்கதையாய்விட்டது. சினிமா நடிகர்களைக் கண்டதும் இளம் மட்டங்கள் துடிக்கும் துடிப்பைப் பார்த்தால் பரிதாபமாயிருக்கும்

சமீபத்தில்சிவாஜிகணேசன் இலங்கைவந்தபோது கொழும்பிலுள்ள ஒரு தியேட்டருக்குள் நுழைந்தார். அச்சமயம் அங்கு கூடிநின்ற இளம் பெண்களும் வாலிபர்களும் எட்டி நின்று சிவாஜியைத் தொட்டார்கள் கூட்டம் அதிகமாயிருந்ததால் தொட்டுப்பார்க்கும்வாய்ப்புக் கிடைக்காமல் சில பெண்களும் வாலிபர்களும் ஏமாற்றத்தோடு வீடு திரும்ப வேண்டியதாயிற்று. சிலர் இதைப்பைத்தியகாரச் செயல் என்று நினைப்பார்கள். வெளி நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது இதுவொன்றும் பிரமாதமான செயலல்லவென்று எண்ணத் தோன்றும்.

சினிமா நடிகைகள்கொண்டையை வெட்டிச் சிங்காரிக்கும் சலூனில் உள்ள சவரத் தொழிலாளியைச் சிலர் சினேகம் செய்து கொண்டு நடிகைகள்வெட்டிப்போட்டுவிட்டுச் சென்ற கூந்தலைச் சேகரித்து விசிறிகளுக்கு விற்பனை செய்கிறார்கள். ஒருசினிமாநடிகையின்கூந்தல் சராசரி 2 பவுணுக்கு விற்பனையாகிறதாம். அழகான நடிகையின் கூந்தலென்றால் அதிக விலை போகிறது. பாபர் சலூனில் காத்துக் கிடப்பவர்களைக் காட்டிலும் நம் நாட்டு விசிறிகள் கொஞ்சம் மேலல்லவா?

### சிவாஜி-எம். ஜி. ஆர்!

'உங்களுக்கும்' சிவாஜி கணேசனுக்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமை என்ன?' என்ற கேள்வி எம். ஜி. இராமச்சந்திரனிடம் கேட்கப்பட்டது.

அதற்கு எம். ஜி. ஆர். அளித்த பதிலாவது:

"ஒற்றுமை—நடிகர்கள். வேற்றுமை—நான் தி. மு. க. வில்சேர்ந்தவன்; அவர் அதில் சேர்ந்தவரல்ல"

### அசாம் அரசு ஸ்ரூடியோ அமைக்கிறது!

அசாம் அரசு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 9 இலட்சம் செலவில் ஒரு ஸ்ரூடியோ அமைக்க ஏற்பாடுசெய்து வருகிறது

இந்த ஸ்ரூடியோவில் செய்திப் படங்களும் கல்விப் படங்களும் தயாரிக்கப்படும். இத்தகவலை முதலமைச்சரின் விசேட அதிகாரி அறிவித்தார்.



அஞ்சலி கொஞ்சிவிளையாடும் இந்தக் காட்சி 'வீரக்கனல்' என்ற படத்தில்

# புதுமுகம்தோன்றவேண்டும்

## நடிகை காமினி கூறுகிறார்

எந்த உணவு சுவைமிகுந்தது, எதை உண்டால் உடலுக்குறுதி, என்பது பணம் படைத்தவர்களின் தவிப்பு. உணவு ஏதாவது கிடைக்காதா? என்பது ஏழைகளின் தவிப்பு. இருப்பவனுக்கும்தவிப்பு! இல்லாதவனுக்கும் தவிப்பு; அதேபோலத்தான் பட உலகில் வாய்ப்புகள் அளவிற்கு மீறி இருப்பதால் ஒப்பந்தங்கள் அநேகம் இருப்பதால் எதற்கு கால்ஷீட் கொடுக்கலாம் என்பது பலரின் தவிப்பு; நடிக்கும் திறனிருந்தும் வாய்ப்பே கிடைக்காதா என்பது பலரின் தவிப்பு!

இதனால் வாய்ப்பு இருப்பவர்களின் வாய்ப்பைப் பறிக்கவேண்டும் என்பது என்எண்ணமல்ல. வாய்ப்பில்லாதவர்களுக்கு வாய்பளிக்க வேண்டும் என்பது தான் என்வாதம். இத்தகைய ஏற்றத்தாழ்விற்குக் காரணம் பணத்தையே குறிக்கோளாகக்கொண்டு ஒருசிலரையே வைத்துப் படம் எடுக்கவேண்டும் என்ற சில பட முதலாளிகள்தான்.

இவ்வாறுநடிகைகாமினி கூறுகிறார்.


# சிவாஜி கணேசன் அமெரிக்கா செல்வார்

நடிகர்திலகம் சிவாஜி கணேசன் விரைவில் அமெரிக்கா செல்வார். அமெரிக்கா வருமாறு அமெரிக்க அரசாங்கம் அனுப்பியுள்ளஅழைப்பினை அவர் ஏற்றுக் கொண்டார்.

"நான் எனது அமெரிக்கப் பிரயாணத்தை ஆவலுடன் எதிர் நோக்கியிருக்கிறேன். இந்த அழைப்பைப் பெருமையாகக்கருதுகிறேன். அமெரிக்கப் படத்தொழில் பற்றித் தெரிந்து கொள்ளவும், எனது நண்பர்களைச் சந்திக்கவும் இது ஒரு வாய்ப்பாகும்" என்று சிவாஜிகணேசன் கூறினார்.

தம்மை அழைத்துள்ளதற்காக அவர் அமெரிக்க அரசாங்கத்துக்கு தம் நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

அமெரிக்க வெளிவிவகார இலாகாவின் அயல் நாட்டுத்தலைவர்கள் திட்டத்தின் கீழ் சிவாஜி கணேசன் இரண்டு மாதக்காலம் அமெரிக்காவில் சுற்றுப் பயணம் செய்வார். அவர் அமெரிக்க நாட்டு நடிகர்களைக் கண்டு பேசுவார். அமெரிக்கப் படத்தொழிலில் கையாளப்படும் புதிய முறைகள் பற்றித் தெரிந்து கொள்வார். அவர் அமெரிக்கா செல்வது இதுவே முதல் தடவை. அமெரிக்கத் தகவல் நிலையத்தின் நடிப்பு பண்பாட்டுத்துறை அதிகாரி மிஸ் மாத்தா பர்ன்ஸ் நேரில் சென்று, தம் அரசாங்கம் அவரை அழைத்துள்ளதாகத் தெரிவித்து அழைப்புப் பத்திரங்களைக் கொடுத்தார்.



'என்னைப்பார்' படத்தில் நம்பியார்-புதுமுகம் எல். விஜயலட்சுமி

படம்: கிங்ஸ்லி செல்லையா

## ★ வைஜயந்தி ★ திலீப் ★ பாலாஜி

### இலங்கை வருகிறார்கள்!

○ விரைவில் மூன்று பெரும் சினிமா நட்சந்திரங்கள் இலங்கைக்கு வரவிருக்கிறார்கள். சமீபத்தில் திருமணம் செய்து கொண்ட நடிகர் பாலாஜி தனது துணைவியருடன் ஓய்வு எடுப்பதற்காக விரைவில் இலங்கைக்கு வரவிருக்கிறார் என்று தெரியவருகிறது.

சிலோன் தியேட்டர்ஸ் லிமிட்டெட்டார் விரைவில் மிகப் பிரமாண்டமான தயாரிப்பான 'கொஹினூர்' என்ற ஹிந்திப் படத்தை தங்கள் திரைகளில் திரையிடவிருக்கிறார்கள். இதை யொட்டி, பிரஸ்தாப படத்தில் பிரதம பாகம்தாங்கி நடித்திருக்கும் திலீப்குமார் இம்மாதம் 20-ந் திகதி வருகிறார். "கொஹினூர்" திரையிடப்படும் தியேட்டர்களில் அவர் நேரில் தோன்றுவார்.

இலங்கைக்கு வரவிருக்கும் மற்றைய நட்சத்திரம் வைஜயந்திமாலாவாகும். நடன நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக இவர் வருகிறார்.

Registered as a newspaper at the G. P. O.

புதினம்
சுவையான செய்திக் கிழமை இதழ்...

# சங்கதி தெரியுமா?

இரு தமிழ் டாக்டர்களுக்கு விரைவில் சுகாதாரவைத்திய அதிபர் (எம் ஓ. எச்.) பதவி காத்திருக்கிறது. அவர்களில் ஒருவர் யாழ்ப்பாண எம். பி யின் பாரியாரான டாக்டர் திருமதி துரையப்பாவாகவும் இருக்கலாம். அப்படியா சங்கதி அவருக்குப் பதவி கிடைக்க விடக்கூடாது என்று சில பெரிய தலைகள் பிரயத்தனம் செய்து வருகின்றனவாம். இது விஷயமாகச் சுகாதார அமைச்சரின் நீண்டநாள் குடும்ப நண்பரான தமிழ்ப்பிரமுகர் ஒருவரின் உதவியை அவர்கள் நாடியிருப்பதுடன் எதிர்மனு தாக்கல் செய்யக்கையெழுத்து வேட்டையும் ஆரம்பிக்க இருக்கிறார்களாம்.

*　　*

தன் வாழ்நாள் முழுவதும் கம்யூனிசத்தைக் கட்டி வளர்க்கப் பாடுபட்டு அதன் பொருட்டு உயிரைக் கூடத் தியாகம் செய்தாரே திரு. பொன்னம்பலம் கந்தையா, அவரது பாரியார் இப்போது திருமதி சண்முகதாசன் ஆகிவிட்டாராம். சண்முகதாசன் வேறு யாருமல்ல. கம்யூனிஸ்ட் கட்சியின் பிரபல தொழிற் சங்கவாதிகளில் அவரும் ஒருவர் என்பது நாடறிந்த சங்கதியாகும்.

*　　*

பரந்தன் ரசாயனத் தொழிற்சாலையின் உற்பத்திப் பகுதியைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் அங்கிருந்து வெளியேறப் போகிறாராம். 'பிரதம காரியதிகாரி திரு. சுந்தரலிங்கம் வெளியேற வேண்டும், இல்லாவிட்டால் நான் ராஜினமாச் செய்துவிடுவேன்' என்று அடம்பிடிக்கும் அந்தத்தலைக் கணத் தம்பிரான் யார்? தொழிலாளர் கூட்டத்தில் அவர் அனுவசியமாய் புகுந்துவிட்டுப்பின் மன்னிப்புக்கேட்டகாரணம்தான் என்ன?

*　　*

லேக்கவுஸ் தொழிலாளர் வழக்குத் தோல்வியடைந்த செய்தியை 'வீரகேசரி' மட்டும் கொட்டை எழுத்தில் வெளியிடக் காரணம் என்ன? வீரகேசரி கதவடைப்புச் சம்பவம் வழக்கில் இருப்பது தான் இந்த உற்சாகத்திற்குக் காரணமோ?

*　　*

சமீபத்தில் ஆசிரியர் மாற்றங்காரணமாக உருமாற்றப் பெற்ற கொழும்புத்தமிழ்ச்சஞ்சிகை ஒன்று, இன்னொரு கொழும்புத் தமிழ்ச் சஞ்சிகை போலவே விரைவில் இந்திய எழுத்தாளர்களின் எழுத்துக்களால் பக்கத்தை நிரம்பப் போகிறதெனத் தெரிகிறது. ஆதாரம்: 'தினத்தந்தி' யில் வந்த 'தேவை' விளம்பரம்.

*　　*

வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் தமிழை அணுகவிடாது ஆங்கிலத்தில் மட்டுமே நடத்திய யாழ்ப்பாணத்து மகளிர்கல்லூரி எது? டச்சுக்காரர் காலத்துப்பெயர்களை அது தன் இல்லங்களுக்கு இன்றும் சூட்டிக் கட்டிப்பிடித்துக் காப்பது வெட்கக்கேடாக இல்லையா?

*　　*


மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்கம் எதிர்ப்புடன் பிறந்த வரலாறுபற்றி இலக்கிய வட்டாரங்கள் இனிமையான சங்கதிகளை வெளியிடுகின்றன. ஒதுங்கியிருக்கும் கோஷ்டியாரும் இலேசுப்பட்ட பேர்வழிகளல்லவாம். இன்னும் சிறிது காலத்தில் எல்லாம் அம்பலத்துக்கு வரலாம்.

*　　*

இலங்கை புகையிரத இலாக்காவுக்கு இப்போது டீசல் என்சின் தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டது. இ. போ. ச. பஸ் வண்டிகளைப் போல அந்த நன்கொடை என்சின்களிற்சில இப்போது இயங்க மறுத்துவிட்டதே இதற்குக் காரணமாம். பற்றுக்குறை என்சின்களாற் பாதிக்கப்பட்டிருப்பது வடபகுதிப்புகையிரதவீதிதான் என்பதை ஓய்வின்றி ஓடித்திரியும் இருஎன்சின்கள் தான் சாட்சியம் கூறுகின்றன.

*　　*

பதவியிலிருந்து ஓய்வு பெறுமாறு உத்தரவிடப்பட்ட வித்தியாதிகாரி யார்? ஓய்வு காலத்தை மேலும் பின்போடச் செய்வதற்கு அவர்கட்டிப் பிடித்த கால்கள் எத்தனை?




# 200 மாணவரும் தோற்றுத

## பரீட்சை முடிவுகள்

## ஆறு மாதமாகியும் வெளிவரவில்லை!

"யாழ்ப்பாணத்தில் சென்ற முப்பது வருடங்களுக்கு மேலாக தமிழ்ப் பண்டிதர்களும் வித்துவான்களும், தமிழன்பர்களும் கட்டிக்காத்து வளர்த்து வந்த 'ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் நிலைமை மிக மோசமாக இருக்கிறது. தமிழன்போ தமிழறிவோ சிறிதுமில்லாத அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசியல் வாதிகளும் சங்கத்துள் புகுந்துகொண்டு, தமிழறிஞர்கள் சிலரை வெளியேற்றி விட்டனர்.

"இந்தச் சங்கத்தின் குரல்வளையை மெல்ல நெரித்துவிட்டால் தங்கள் புதிய ஸ்தாபனத்துக்குப் போட்டியிராதென்று நினைப்பவர்களும், இதனைச் சாகவும் விடாமல் வாழவும் விடாமல் தங்கள் திருவடியிலேயே வைத்துக்கொண்டு சுயகாரியங்களை நிறைவேற்ற எண்ணுபவர்களும் சங்கத்துள் இருக்கிறார்களோ என்று சந்தேகப்படவேண்டியிருக்கிறது.

"பதினாயிரக் கணக்கான மாணவர் தோற்றிய பரீட்சைப் பெறுபேறுகள் மூன்று நான்கு மாதங்களில் வெளியாகிவிடும்போது 200 மாணவர்கள்தானும் தோற்றுத இச்சங்கப் பரீட்சை முடிவுகள் ஆறு மாதங்களாகியும் 'பகிரங்கமாக' வெளியிடப்படாததேன்?" என்று பிரபல தமிழறிஞர் ஒருவர் புதினம் நிருபரிடம் உணர்ச்சி வசப்பட்டுக் கூறியிருக்கிறார்.

இலங்கைத் தமிழ் மக்களின் மதிப்புக்குரிய ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் சீர்கேடுகள் பொதுமக்களின் கவனத்துக்குரியதில் வியப்பில்லை.

## புதினத்தில் புதிய அம்சங்கள்

"புதினம்" வாசகர்களுக்காகப் புதியபல அம்சங்களைப் புகுத்த எண்ணியுள்ளோம். சினிமாச் சாம்பார், சினிமா டைரி, படவிமர்சனம், கேள்வி பதில் ஆகியவை புதிய அம்சங்களில் சில,

- "மாயாவி" என்றதும் 'கண்டதும் கேட்டதும்' தான் உடனே உங்களுக்கு நினைவுக்கு வருகிறது இல்லையா? இடையிடையே தூங்கும் பழக்கமுள்ள இந்த எரிமலை எழுத்தாளரின் பேனு புதினத்தில் அனல்கக்கப் போகிறது!

கண்கவரும் படங்களுக்கு
செல்லம்ஸ்
போன்: 436. யாழ்ப்பாணம்.

"என்னை உங்களுக்குத்தெரியாது ஆனு உங்களை எனக்கு ஒரு வருடத்துக்கு முன்பே தெரியும்" என்ருள் அந்தஅழகி. அவளிடம் உள்ளத்தைப் பறி கொடுத்தான் அவன். கோல் பேஸில் துளிர்விட்ட காதல் அவளது வீட்டு முற்றம் வரை பற்றிப் படர்ந்தது. முடிவு...?

"சீலன்" எழுதும் முற்றிலும் புதுமையான குறுநாவலை போட்டோப் படங்களுடன் புதினத்தில் எதிர்பாருங்கள்.

இப்பத்திரிகையை அச்சிடுவித்து வெளியிட்ட ஆசிரியர்: பொன்னுலை தி. ச. வீரதநூசன்.
அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். போன்: 348; தந்தி: 'அச்சகம்'